விலை: 30.00
பக்கங்கள் : முப்பத்து இரண்டு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

சங்கு 23 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 05 திங்கட்கிழமை (20.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 001

## அத்வைத தத்துவத்துக்கமைய மக்களை வழிப்படுத்தும் அரும்பணியை வலம்புரி ஆற்றுகிறது

### யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் வலம்புரிப் பத்திரிகை அத்வைத தத்துவத்துக்கமைய மக்களை வழிப்படுத்திச் செல்லும் பெரும்பணியை ஆற்றி வருகிறது என யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா புகழாரம் சூட்டியுள்ளார்.

வலம்புரி நாளிதழின் 22 ஆவது அகவையையொட்டி அவர் வழங்கிய ஆசிச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் வழங்கிய ஆசிச் செய்தியில்.

31

உங்கள் வலம்புரிக்கு இன்று அகவை 22

## இலங்கையில் ஜனவரி 1ஆம் திகதி முதல்

# தடுப்பூசி அட்டை கட்டாயமாகிறது

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



(கம்பஹா) இலங்கையில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் பொது இடங்களுக்குச் செல்லும்போது கோவிட் தடுப்பூசி அட்டையைக் கொண்டு செல்வதைக் கட்டாயமாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (03ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணிக் காய்ச்சலால் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### யாழ்.கொட்டடியில் சோகம்

(யாழ்ப்பாணம்)

உண்ணிக் காய்ச்சல் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த செபஸ்தியன் பெனடிக் றொசாரி (வயது-63) என்ற ஒரு பிள்ளை

31

வடக்கு கடற்பகுதிகளில்

## 55 இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவு மற்றும் தலைமன்னார் கடற்பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் எல்லைதாண்டி மீன்பிடி நடவடிக்கை

31

கொரோனா

## 18 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் கோவிட் தொற்றால் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

31

வவுனியாவிலும்

## காஸ் அடுப்பு வெடித்தது

(வவுனியா)

வவுனியா, 4ஆம் கட்டைப் பகுதியில் வீடு ஒன்றில் சமைத்துக்கொண்டு இருந்த போது காஸ் அடுப்பு

31

## மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படாது

### அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலினை ஒத்திவைக்கும் தீர்மானம் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

31

13ஆவது திருத்தச் சட்டம்

## தமிழ் மக்களுக்கு எந்த பாதுகாப்பையும் வழங்கவில்லை

### காணாமல்போனவர்களின் உறவுகள்

(வவுனியா)

13ஆவது திருத்தம் தமிழர்களுக்கு எந்தப் பாதுகாப்பையும் வழங்கவில்லை என வவுனியாவில் கடந்த 1767ஆவது நாளாக தொடர் போராட்

31

## கிளிநொச்சியில் கிணற்றிலிருந்து 4 வயது சிறுமி சடலமாக மீட்பு

(தருமபுரம்)

கிணற்றிலிருந்து சிறுமி சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் நேற்று பதிவாகியுள்ளது.

கிளிநொச்சி அம்பாள்நகர் பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த 4 வயதுச் சிறுமி காணாமல்போன நிலையில் தேடப்பட்டுள்ளார்.

சிறுமியை உறவினர்கள் மற்றும் அயலவரின் உதவியு

31

## கிணற்றில் தவறிவிழுந்த 8 வயது சிறுவன் மரணம்

### வடமராட்சியில் பரிதாபம்



(யாழ்ப்பாணம்)

தோட்டக் கிணற்றில் மீன் பிடித்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் கிணற்றில் விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில்

# சடலமாக மீட்கப்பட்ட சிறுமியின் மருத்துவ அறிக்கை வெளியானது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மூங்கிலாறில் பற்றைக்காணிக்குள் சடலமாக மீட்கப்பட்ட 12 வயதுச் சிறுமி, அவரது அந்தரங்க உறுப்பில் ஏற்பட்ட காயம் காரணமாக உயிரிழந்துள்ளார் என்று சட்ட மருத்துவ வல்லுநர் அறிக்கையிட்டுள்ளார்.

அதனடிப்படையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

யோகராசா நிதர்ஷனா (வயது -12) என்ற சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். திருகோணமலையில் மாணவர் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்ற அவர், கடந்த ஜூலை மாதம் வீடு திரும்பியிருந்தார். அதன்பின்னர் அவர் வீட்டிலேயே தங்கியிருந்தார்.

கடந்த 15ஆம் திகதி அவர் காணாமற்போனார் என்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சிறுமி வீட்டிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் உள்ள பற்றைக் காணி ஒன்றில் நேற்று முன்தினம் 18ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு சட்ட மருத்துவ வல்லுநர் கனகசபாபதி வாசுதேவா முன்னிலையில் உடற்கூற்றுப் பரிசோதனை இடம்பெற்றது.

சிறுமியின் பெண் உறுப்பில் ஏற்பட்ட காயம் காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று சட்ட மருத்துவ வல்லுநர் சட்ட மருத்துவ அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

இந்த நிலையில் சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டாரா? கருக்கலைப்புக்கு உட்படுத்தப்பட்டாரா? சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டாரா? போன்ற கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் உறவினர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)

### யாழில் கொரோனாவால்

## மூத்த சட்டத்தரணி கேசவன் மரணம்



(யாழ்ப்பாணம்)

மூத்த சட்டத்தரணி கனகரட்ணம் கேசவன் (வயது -74) நேற்று பிற்பகல் காலமானார்.

கோவிட் -19 நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்ற நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதவானாக நீண்டகாலம் கடமையாற்றிய அவர், யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளராகவும் தனது இயலுமான காலம்வரை பதவி வகித்தார்.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த அவர் கனகரட்ணம் சட்ட நிறுவனத்தின் இயக்குநர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா-33)


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியில் இருந்து வடக்குப் பக்கமாக 500 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியின் மேற்குப் பக்கமாக உள்ள வீதியில் 4 ஆம் காணி 7 பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு. (9150)

நேரடித் தொடர்பு : 076 999 2016 / 077 323 7891


### வடக்கு, கிழக்கு உட்பட

# 5 மாவட்டங்களில் இன்று மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்றையதினம் ஐந்து மாவட்டங்களிலுள்ள அரச வைத்தியசாலை வைத்தியர்கள் 24 மணிநேர அடையாளப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இன்று காலை 8 மணி முதல் 24 மணித்தியாலங்களுக்கு மன்னார், திருகோணமலை, நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டாலும் அவசர சிகிச்சைப் பிரிவுகளின் நடவடிக்கைகள் இடம்பெறும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ஞா)

# முன்பள்ளி ஆசிரியை சடலமாக மீட்பு!

## கிளிநொச்சியில் சம்பவம்

(முறிகண்டி)



சந்தேகத்திற்கிடமான வகையில் உயிரிழந்த நிலையில் முன்பள்ளி ஆசிரியை ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஜெயந்திநகரில் வாடகை வீட்டில் வசித்து வந்த பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தரான இவர் முன்பள்ளி ஆசிரியையாக சேவை புரிந்து வந்துள்ளார்.

கிளிநொச்சி விநாயகபுரம் இயக்கச்சிப் பகுதியைச் சேர்ந்த இவர் தொழிலின் நிமிர்த்தம் வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார். 32 வயதுடைய நிலகரட்ண ஜெயசீலி என்ற 3 பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார். (ஞா-60,100)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு 16 . 02 . 1942

இறப்பு 22 . 11 . 2021

கடந்த 22.11.2021 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் ஆறுமுகம் இராசகோபால்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.12.2021) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியம் நாளை மறுதினம் (22.12.2021) புதன்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 48/9, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

(9101) குடும்பத்தினர்


# ஓமிக்ரோன் பரவலைத் தடுக்க அரசு அக்கறை காட்டவில்லை

## தாதியர் சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஒமிக்ரோன் வைரஸ் பிறழ்வு இலங்கையில் பரவுவதைத் தடுப்பதற்கு அரசு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

தவறான அரசியல் தீர்மானத்தால் தான் பாரிய அச்சுறுத்தல் இதற்கு முன்னரும் ஏற்பட்டது. இனியும் அவ்வாறான தொரு நிலைமை ஏற்பட இடமளிக்க முடியாது என்று அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, ஒமிக்ரோன் பிறழ்வே உலகுக்கு தற்போது பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இங்கிலாந்தில் நாளாந்தம் 70 பேர்வரை ஒமிக்ரோன் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர். இலங்கைக்கும் அச்சுறுத்தல் உள்ளது. இதுவரை நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து வந்த ஒருவருக்கும் ஒமிக்ரோன் உறுதியாகியுள்ளது. அவர் டிசம்பர் 9 ஆம் திகதி இலங்கை வந்துள்ளார். 11 ஆம் திகதிவரை இருந்துள்ளார். டிசம்பர் 9, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் கொழும்பில் கசினோ விளையாடியுள்ளார். அந்த கசினோ நிலையத்துக்கு வந்தவர்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. இவ்வாறு செயற்பட்டால் எப்படி ஒமிக்ரோன் பிறழ்வு இலங்கையில் பரவுவதைத் தடுக்க முடியும் என்றார். (ஞா)

# யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களிடையே மோதல்

## ஐந்து பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பெரும்பான்மையின மாணவர்கள் இடையே ஏற்பட்ட மோதலில் 5 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ். பாற்பண்ணைப் பகுதியிலுள்ள விடுதியில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விடுதியில் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் விருந்தில் கலந்து கொண்டவேளை ஏற்பட்ட மோதலில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த 5 பேரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஞா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையின மக்களின் குரல்களை பயங்கரவாத தடைச்சட்டம் மூலம் அரசு அடக்குகிறது

(கொழும்பு)

**நீதியை நிலைநாட்டுமாறு சிறுபான்மையினத்தவரிடமிருந்து எழுகின்ற குரல்களை அடக்குவதற்காகவே தற்போதைய அரசாங்கம் பயங்கரவாதத்தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி வருகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன சுட்டிக்காட்டினார்.**

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே எரான் விக்ரமரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகமோசமான குற்றங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டவர்கள் பிணையில் விடுவிக்கப் படுகிறதொரு சூழ்நிலையில், அண்மையில் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர முற்பட்டவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

நீதியை நிலைநாட்டுமாறு சிறுபான்மையினத்தவரிடமிருந்து எழுகின்ற குரல்களை அடக்குவதற்காகவே தற்போதைய அரசாங்கம் பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பயன்படுத்திவருகிறது. போதிய ஆதாரங்கள் இல்லாதபோதிலும், எமது சொந்தப் பிரஜைகளை வலுக்கட்டாயமாகத் தடுத்து வைப் பதற்கான ஓர் ஆயுதமாக இச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது.

பயங்கரவாத்தடைச்சட்டம் உருவாக்கப்பட்டதிலிருந்து அச்சட்டத்தின்கீழ் நபர்கள் தன்னிச்சையாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன் சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள்.

எனவே சர்வதேச பிரகடனங்களுக்கு அமைவானதாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக மாத்திரமன்றி எமது அரசியலமைப்பிற்கு அமைவானதாகவும் இருக்கவேண்டும் என்பதற்காகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது அவசியமாகும்.

இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகளுக்கான இடைவெளியை விரிவுபடுத்துவதற்கு இருக்கக்கூடிய சிறியதோர் வாய்ப்பு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையாகும். அதை தக்க வைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வது அவசியமாகும் என அவர் வலியுறுத்தினார். (நி-5)



# பிரதி சபாநாயகருக்கு 'அப்துல்கலாம்' விருது



(கொழும்பு)

மின்சக்தி துறையின் முன்னேற்றத்திற்கு செய்த பங்களிப்புக்காக பிரதி சபாநாயகருக்கு அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டுள்ளதாக லீடர் இந்தியா அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

இலங்கையின் பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பெயரில் வழங்கப்படும் விசேட விருது வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்ச்சியில் அவருக்கு அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டது. (நி-5)

# கிளிநொச்சியில் இருந்து கதிர்காமம் சென்ற பஸ் விபத்துக்குள்ளானதில் 17 பேர் படுகாயம்


(கதிர்காமம்)

கிளிநொச்சியில் இருந்து யாத்திரீகர்களுடன் கதிர்காமம் நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்று பதியத்தலாவை பகுதியில் விபத்துக்குள்ளானதில் 17 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்தானது நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பதியத்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் இருந்து நேற்று முன்தினம் இரவு கதிர்கமத்தை நோக்கி குறித்த பேருந்து பயணத்தை ஆரம்பித்துள்ளது.

இதன்போது நேற்று அதிகாலை பதியத்தலாவை கல்லோடை பாலத்துக்கு அருகில் சாரதிக்கு ஏற்பட்ட தூக்க கலக்கத்தினால், பேருந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதாக கூறப்படுகிறது.



இதனால் அதில் பயணித்த 17 பேர் படுகாயமடைந்த நிலையில் மஹாஓயா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதியத்தலாவை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# முக்கிய தீர்மானங்களை எடுக்கும் அமைச்சரவை கூட்டம் இன்று

(கொழும்பு)

நாட்டின் நிதி நெருக்கடி நிலைமைகளுக்கான தீர்வுகள், புதிய ஆண்டின் அமைச்சரவை மற்றும் அரச அதிகாரிகளின் மாற்றங்கள் குறித்து ஆராயவும் முக்கிய தீர்மானம் எடுக்கும் வகையிலும் ஜனாதிபதி தலைமையில் இன்று அமைச்சரவை கூடுகிறது.

அமைச்சரவை தீர்மானங்களை வெளியில் விமர்சிக்கும் நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அரசாங்கம் பல முக்கியமான தீர்மானங்களை முன்னெடுக்கவுள்ளதாக அரசாங்கத்தின் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் இன்று முக்கியமான தீர்மானங்களை ஆராயும் விதமான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் கூடுகிறது. (நி-5)

# கட்டாயமாகிறது தடுப்பூசி அட்டை

## சுற்றுலாத்துறை அமைச்சர்

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் பொது இடங்களுக்குச் செல்வதற்குத் தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்தது.

அதன்படி, எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் பொது இடங்களுக்குச் செல்லும் போது கொவிட் தடுப்பூசி அட்டையை கொண்டு செல்வதை கட்டாயமாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கொவிட் தடுப்பு குழுக்கூட்டத்தில் கலந்துக்கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே வருடத்தில் அதிக ரன்கள் சாதனை படைத்த ஜோ ரூட்



டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரே வருடத்தில் 1,600 ரன்களுக்கு மேல் அடித்து இங்கிலாந்து அணி கப்டன் ஜோ ரூட் சாதனைப் படைத்துள்ளார்.

ஆவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ஆஷஸ் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. அடிலெய்டில் நடைபெற்று வரும் பகல்-இரவு டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி கப்டன் ஜோ ரூட் முதல் இன்னிங்சில் 89 ரன்கள் சேர்த்தார். இதன்மூலம் இந்த வருடத்தில் மட்டும் 1,600 ரன்களுக்கு மேல் அடித்துள்ளார். இதன்மூலம் ஒரே வருடத்தில் 1,600 ரன்களை கடந்து சச்சின் டெண்டுல்கர், ரிக்கி பொண்டிங், கவாஸ்கர் சாதனையை முறியடித்துள்ளார். ஜோ ரூட்டை விட பாகிஸ்தான் முன்னாள் வீரர் முகமது யூசுப் 2006இல் 1788 ரன்கள் அடித்து முதல் இடத்தில் உள்ளார். வெஸ்ட் இண்டீஸ் வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் 1976 இல் 1710 ரன்கள் அடித்து 2 இவது இடத்தில் உள்ளார். தென்னாபிரிக்க அணி முன்னாள் கப்டன் கிரேம் ஸ்மித் 2008 இல் 1656 ரன்கள் அடித்து மூன்றாமிடத்தில் உள்ளார். (4-6)

# இந்திய அணியின் உப தலைவராக ராகுல்




தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ள இந்திய அணியின் உபதலைவராக கே.எல்.ராகுல் பெயரிடப்பட்டுள்ளார்.

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் உபதலைவர் ரோஹித் சர்மாவுக்கு ஏற்பட்ட உபாதை காரணமாக அவரது இடத்திற்கு கே.எல்.ராகுல் பெயரிப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கான சுற்றுப் பயணத்திற்கு முன்னர் இடம்பெற்ற பயிற்சி நடவடிக்கைகளின் போது ரோஹித் சர்மாவுக்கு உபாதை ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையில் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் இடம்பெறவுள்ளதோடு முதலாவது போட்டி எதிர் வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (4-6)

# இருபது-20 தரவரிசையில் கோலி கடும் பின்னடைவு



இருபது 20 தொடருக்கான புதிய தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது. இதில் பட்ஸ்மேன்கள் தரவரிசை பட்டியலில் இந்திய அணியின் முன்னாள் கப்டன் விராட் கோலி வரலாறு காணாத அளவு சரிவைக் கண்டுள்ளார்.

டாப்-10 இடத்தில் ஆதிக்கம் செலுத்தும் விராட் கோலி இம்முறை டாப் 10-இல் இருந்து வெளியேறியுள்ளது ரசிகர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பட்ஸ்மேன்கள் தரவரிசைப் பட்டியலில் இங்கிலாந்து அணியின் டேவிட் மலான் முதலிடத்திலும், தென் ஆபிரிக்க அணியின் மார்க்ரம் 2 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் அணி கப்டன் பாபர் அசாம் 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.

பாகிஸ்தானின் முகமது ரிஸ்வான் 4 ஆவது இடத்திலும், இந்தியாவின் கே.எல். ராகுல் 5 ஆவது இடத்திலும் உள்ளனர்.

முன்னாள் கப்டன் விராட் கோலி 657 புள்ளிகளுடன் தரவரிசைப் பட்டியலில் 11 ஆவது இடத்திற்கு சரிவடைந்துள்ளார். ரோகித் சர்மா 13ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2473

### தர்மிதா

என்னோட ஆயுள் முடிய போகுது.
இனி இந்த ஜனங்களுக்கு நீதான் எல்லாம்...
நான் என்னவெல்லாம் செஞ்சேனோ
அதைவிட நீ டபுள் மடங்கா செய்யனும்.




### ஜெகன்

என் மாமியார் ரயிலில் இருந்து கீழே விழுந்துட்டாங்க...
உடனே செயினை பிடிச்சி இழுக்கலையா?



இழுத்தேன்.செயின் மட்டும் தான் வந்தது.
மாமியார் விழுந்துட்டார்....

### சுகுமாரி

மகன்- அப்பா நான் ஒரு விடயம் சொல்லனும்...
அப்பா- சாப்பிடும் போது பேசக் கூடாது..அப்புறம் சொல்லுடா..
(சாப்பிட்ட பிறகு)
அப்பா- என்னடா இப்ப சொல்லு...
மகன்- சாம்பார்ல பல்லி விழுந்துருச்சப்பா...



### வக்ஷலா

மந்திரியாரே ஏன் அவனை அடிக்கிறீர்?
மன்னா,நம்ம ராணுவ ரகசியத்தை வெளியில் சொல்லிட்டான்.
நம்ம கிட்டதான் ராணுவமே கிடையாதே!
அதைத் தான் சொல்லிட்டான்!



### தர்மிதன்

ஓவரா பேசுற வாயும்...
ரோட்ல சுத்தற நாயும்...
எப்ப வேணாலும் அடி வாங்கும்...



### கலேஷ்

ஆமா...உன் புருஷன் எங்க ஆள பார்க்கவே முடியல?
என் புருஷனுக்கும் எனக்கும் சண்ட அவர இப்ப தோட்டத்தில வச்சிருக்கேன்.நான் இப்பத்தான் தோட்டத்துல இருந்து வாறேன்
ஆள காணோமே...
தோண்டி பாருயா
படுத்திருப்பாரு...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

20.12.2021
மார்கழி 05, திங்கட்கிழமை
பிரதமை முற்பகல் 12.18 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 7.45 மணிவரை
சுபநேரம் 12.24-1.54 மணிவரை
இராகு காலம் 7.54-9.24 மணிவரை
சந்திராஷ்டமம்- அனுசம், கேட்டை
ஆருத்திரா தரிசனம், சித்தாமிர்தம் வளவன்


மேஷம்

செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.


ரிஷபம்

அலங்காரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.


மிதுனம்

இறை வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம்.


கடகம்

எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தூரத்து உறவுகளின் சந்திப்பால் சுபவிரயங்கள் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.


சிம்மம்

செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்,கௌரவமான நாள் , மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


கன்னி

கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, கனவு பலிதமுண்டு, வருமானம் திருப்தி தரும்.


துலாம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.


விருச்சிகம்

இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம்.


தனுசு

குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


மகரம்

உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், உடல் நலன் சீராகும், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


கும்பம்

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.


மீனம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகும், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், சுப காரியச் செயல்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

இணைந்து வாழ்வது ஆற்றல் ஆக்கம் பிரிந்து வாழ்வது ஆபத்து அழிவு

# பல்கலைக்கு தெரிவான மாணவர்களை தாமதிக்காது இணைத்துக் கொள்ள நடவடிக்கை

## கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

நாட்டில் உயர்தரப் பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு துரிதமாக இணைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவிசாவளையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகிய பின்னர் பத்து மாதங்களுக்கும் கூடுதலாக மாணவர்கள் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும் அதனைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, புலமைப்பரிசில், உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சைத் திகதிகளில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நிவாரண விலையில் பொருட்கள்

## சதொச விற்பனை நிலையங்களில் வாங்கலாம் என்கிறார் பந்துல

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக 8 அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய நிவாரண பொதி 1998 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

நிவாரணப் பொதி விநியோக நடமாடும் சேவை நாளை முதல் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் என வர்த்தகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார்.

ஒரு கிலோகிராம் 125 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் சுபிரி சம்பா அரிசி 10 கிலோகிராமும், 125 ரூபாவிற்கு விற்பனை செயயப்படும் சிவப்பு சீனி இரண்டு கிலோகிராமும், 140 ரூபா பெறுமதியான தாய்லாந்து நெத்தலி 200 கிராமும். 400கிராம் நூடில்ஸ் பக்கற் ஒன்றும்,400 கிராம் உப்பு பக்கற் ஒன்றும், வாசனை மற்றும் ஆடை கழுவும் சவர்க்காரம் இரண்டும்,95 ரூபா பெறுமதியி லான பப்படம் ஒரு பக்கற் போன்றன அந்த நிவாரண பொதிக்குள் உள்ளடக்கப்படும்.

நிவாரண பொதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள 8 அத்தியாவசிய பொருட்களை ஏனைய விற்பனை நிலையங்களில் நுகர்வோர் 2893 ரூபாவிற்கு கொள்வனவு செய்ய முடியும்.

சதொச விற்பனை நிலையத்தில் இந்த நிவாரணப் பொதியை பெற்றுக் கொள்வதால் நுகர்வோர் சுமார் 800 ரூபா வரை சேமிக்க முடியும்.

சதொச நிறுவனம் இன்று முதல் இந்த அத்தியாவசிய நிவாரண பொதியை நடமாடும் சேவை ஊடாக விநியோகிக்கத் தீர்மானித்துள்ளது.

1998 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அழைத்து நுகர்வோர் 48 மணித்தியாலத்திற்குள் நிவாரண பொதியை பெற்றுக் கொள்ள முடியும்.சேவை கட்டணமாக 150 ரூபா அறவிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)


# வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்







மலர்வு
30 – 01 – 1930

உதிர்வு
01 – 12 – 2021

கடந்த 01-12-2021 புதன்கிழமையன்று சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் சிவத்திரு நாகநாதர் கந்தசாமி

(முன்னை நாள் ஜெயராம்ஸ், ஜெயகௌரி ஆகிய புடைவை மாளிகைகளின் உரிமையாளர் – சுன்னாகம்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 21.12.2021 நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிராத்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்)

அத்துடன், எங்களது துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி போன்றவற்றின் மூலம் அனுதாபம் தெரிவித்த சகல உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் பல்வேறு வழிகளில் உதவிய உறவினர்களுக்கும் அன்புள்ளங்கள் அனைவருக்கும் மேலும் எங்கள் குடும்பத்தலைவன் நோயுற்ற காலத்தில் வைத்தியசாலையில் அவரை அன்புடன் பராமரித்த அத்தனை வைத்தியர்களுக்கும் தாதிய ஊழியர்களுக்கும் மற்றும் சகல உத்தியோகத்தர்களுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(9120)

"ஜெய றாம்ஸ் இல்லம்"
[illegible]
தெல்லிப்பழை கிழக்கு

தொடர்புகளுக்கு:
077 918 4456
+4915211222766
+491734491232

இங்ஙனம்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிற்கு எதிராகவும் போராட வேண்டிய சூழ்நிலை

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்

(கரணவாய்)

**சீனாவின் நடவடிக்கைகளை நாங்கள் ஒரு துளியளவும் ஏற்க மாட்டோம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் சனிக்கிழமை வடமராட்சியில் நிக ழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் குறிப்பிடுகையில் இல ங்கை அரசாங்கம் தற்போது புதிய இராஜ தந்திரத்தை கையாள்கின்றது. அத்துடன் இந்தியாவை வெருட்டி கையாள்வதற்கு சீனா என்ன உத்திகளை கையாள வேண்டுமோ அதற்காக ஈழத்தமிழர்களின் உரிமைகளை நசுக்குவதற்கு சீனாவை ஒரு கருவியாக இலங்கை அரசு பயன்படுத்து கின்றது.

இலங்கைக்கு பல தூதுவர்கள் வருகிறார்கள் போகிறார்கள் ஆனால் சீன தூதுவர் சக்கோட்டையில் இருந்து இந்தியா எவ்வளவு தூரம் என்று கேட்பதும் மன்னாரிலே மணல் திட்டுக்களைச் சென்று பார்ப்பதும் ஒரு மிக ஆபத்தானது.

தமிழர்களின் இருப்பை கேள்விக்கு உட்படுத்து கின்ற ஒரு விடயத்தை சீன தூதுவர் கடந்த இரண்டு நாட்களாக செய்து இருக்கிறார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, நாங்கள் இந்தியாவிற்கும் நிலம் வழங்குவோம் சீனாவிற்கும் நிலம் வழங்குவோம் என்றால் எங்களு டைய நிலங்களை நீங்கள் யார் யாருக்கு வழங்க போகிறீர்கள். பல திணைக்களத்தின் ஊடாகவும் இராணுவம், கடற்படை, பொலிஸ், விமானபடை ஊடாகவும் பறித்துக்கொண்டு இருக் கிற அதேநேரம் தொழில் முயற்சி என்ற போர்வையில் தமிழர்களுடைய சுயாதீனமான சுயநிர்ணய உரிமையைப் பறிக்கின்ற வேலையை அரசு பல இடங்களில் கையாள்கிறது.

சீனாவின் நடவடிக்கைகளை நாங்கள் ஒரு துளியளவும் ஏற்கமாட்டோம்.

இலங்கைக்கு மட்டுமல்ல சீனாவிற்கும் எதிராகவும் நாங்கள் போராட வேண்டிய சூழ்நிலை வந்துள்ளதாக உணருகின்றோம். ஆகவே அதற்கான நடவடிக்கையையும் நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்வோம் என தெரிவித்தார். (4-5-60)


## சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு புதிய பொலிஸ் பொறுப்பதிகாரி



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு புதிய பொலிஸ் பொறுப்பதிகாரியாக பாலித சேனவிதானே நியமிக்கப்பட்டார்.

அவர் தனது கடமைகளை கடந்த வாரம் பொறுப்பேற்றுள்ளார். சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய ராஜபக்ஷ பதவி உயர்வு பெற்று அனுராதபுரத்திற்கு சென்றுள்ள நிலையில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய புதிய பொறுப்பதிகாரியாக பதுளை மாவட்டத்தின் பசறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பாலித சேனவிதானே புதிய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (4-5-30)



பனை அபிவிருத்திச் சபை தொழில் திறன் பயிற்சி அதிகார சபை மற்றும் இலங்கை ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து பனை சார் கற்கை நெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.அந்தவகையில் கடந்த 15ஆம் திகதி கொழும்பில் உள்ள.இலங்கை மன்றத்தின் கேட்போர் கூடத்தில் மேற்படி நிறுவனங்களுடன் இணைந்து பனை அபிவிருத்திச் சபை பயிற்சி நெறிகளை மேற்கொள்வதற்குரிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.




பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறையை அமைப்பதற்கான உபகரணங்கள் கடந்த 15 ஆம் திகதி கையளிக்கப்பட்டன.

(படம்-கஜிந்தன்)

## திறன் வகுப்பறை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க பாடசாலை திறன் வகுப்பறைத் திறப்பு விழா நாளை 21 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை அதிபர் வி.பிரகலாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வலிகாமம் வலயக்கல்வி பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார், IMHO Lanka இயக்குனர் சு.கிருஸ்ணகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-5)

## பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட புத்தூர் பொது நூலகத்தில் வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவும் "புதுவை நாதம்" (இதழ்2) சஞ்சிகை வெளியீடும் இன்று 20ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஷ் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் தலைவர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன், சிறப்பு விருந்தினராக புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி அதிபர் சி. [illegible] ஆகியோர் கலந்து கொள்வர். (4-5-21)



வடமராட்சி புறாப் பொறுக்கி பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கபட்ட வயோதிபத் தம்பதிக்கு கணபதி அறக்கட்டளை ஊடாக சிறிய வீடு அண்மையில் அமைத்துக்கொடுக்கப்பட்டது. (படம் : மகாலிங்கம்)



தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியத்தினால் கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யா/ கொட்டி நமசிவாயம் வித்தியா சாலையில் 160 மாணவர்களிற்கு 3 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள், சீருடைகள், கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.



இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தமிழ் கலாசார மன்றம் வெளியிடும் "குறிஞ்சி தமிழ்" நூல் வெளியீட்டு விழா, கடந்த 17 ஆம் திகதி யாழில் உள்ள நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஐ தீர்வாக ஏற்க முடியாது
## பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)

13 ஆவது திருத்தச் சட்டம் அடிப்படையில் பழுதுகள் நிறைந்தது என்பதை தென்னிலங்கை தலைவர்களே ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் அதனை தீர்வாக எம்மால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழரசுக் கட்சி மக்களிடத்தில் சமஷ்டி தீர்வுக்காக பெற்றுக் கொண்ட ஆணையை மீறிச் செயற்படாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிதைந்து போகிற தமிழ்த் தேசியமும் சிந்திக்காத தலைமைகளும் எனும் தலைப்பில் கருத்துப்பகிர்வுறவாடல் நிகழ்வு யாழ். கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதாவது, சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுடனான தீர்வு என்பதே எம்முடையதும் மக்களுடையதும் நிலைப்பாடாகும். போரின் பின்னர் 2010 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையில் மக்கள் முன்னிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இக் கொள்கையை முன்வைத்து அனைத்து தேர்தல்களிலும் ஆணை பெற்று வந்திருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டி கட்டமைப்பிலான அதிகாரப் பகிர்வுடனான தீர்வு என்ற விடயத்தில் மாற்றுக் கருத்துக்களை கொண்டிருக்கவில்லை.

தற்போது தமிழ் பேசும் தரப்புக்களாக ஒன்றுகூடி 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குமாறு கோருவதற்கு முயற்சிக்கப்படுகிறது.

நாங்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையோ முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கையோ சந்தித்த போது 13 ஐ வலியுறுத்தவில்லை. அப்படியிருக்கையில்



வாக்குறுதியளித்த ராஜபக்ஷக்கள் வேண்டுமானால் 13 ஆம் திருத்தச்சட்டத்தை அர்த்தமுள்ளதாக மாற்றி அமுலாக்கட்டும். அது அவர்கள் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

நாங்கள் வலிந்துபோய் அடிப்படையில் பழுதான திருத்த முடியாத 13 ஆவது சட்டத்தை அமுலாக்கவேண்டிய தேவை கிடையாது. பிறிதொரு நிகழ்ச்சி நிரலில் 13 ஐ அமுல்படுத்தும் சில தரப்புக்களின் செயற்பாட்டிற்கு ஆதரவினை வழங்க முடியாது. தமிழரசுக் கட்சி இந்த விடயத்தில் உறுதியாக உள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)

# கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் மீண்டும் போராட்டம்
## ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

அதிபர் ஆசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் வழங் கப்பட்ட வாக்குறுதிகள் ஜனவரி 22ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்படாவிட்டால், மீண்டும் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சம்பள முரண்பாடு மற்றும் அதிபர் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சுற்றறிக்கை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் 6 மாத காலத்திற்குள் தீர்வு வழங்குவதற்கான குழு அமைக்கப்பட வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத் தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இல ங்கை ஆசிரியர் சங்கத்தின் வட மாகாண அதிபர்கள் ஆசிரியர்களுடனான கலந் துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்தார். (நி-5)



கொழும்பு கொட்டாஞ்சேனை வட்ட லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் பூந்தோட்டம் அருள்மிகு ஸ்ரீ லக்ஷ்மி சமேத நரசிங்கர் ஆலயத்தின் ஒழுங்கமைப்பில் இலவச மருத்துவ முகாம் நேற்று முன்தினம் ஆலயத்தின் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-சதீஸ்)

# எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் மூடப்படும் அபாயம்
## எரிசக்தி அமைச்சர்

(கொழும்பு)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மீண்டும் மூடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சுத்திகரிப்பிற்காக கொள்வனவு செய்யப்பட்ட மசகு எண்ணெய் நாட்டை வந்தடைய தாமதம் ஏற்பட்டுள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொள்வனவு செய்யப்படும் மசகு எண்ணெய் நாட்டை வந்தடைய சாதாரணமாக 90 நாட்கள் ஆகின்றன.

கடந்த காலங்களில் அந்நிய செலாவணி தொடர்பிலான பிரச்சினை காரணமாக மசகு எண்ணெய் கொள்வனவில் தாமதம் ஏற்பட்டதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, தற்போது முற்பதிவு செய்யப்பட்டுள்ள மசகு எண்ணெய் எதிர்வரும் ஜனவரி மாதம் 25 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது.

இந்த நிலையில், மசகு எண்ணெய் நாட்டை வந்தடையும் வரை ஜனவரி மாதத்தின் முதல் வாரம் முதல் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடும் நிலை ஏற்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், எண்ணெய் சுத்திகரிப்புக்காக பயன்படுத்தப்படும் மசகு எண்ணெய் வகையுடன் ஒத்த இரு மசகு எண்ணெய் வகைகள் தொடர்பில் விலைமனு கோரப்பட்டுள்ளதுடன், அந்த மசகு எண்ணையைப் பெற முடிந்தால் சுத்திகரிப்பு நிலையத்தை மூடும் நிலை ஏற்படாது எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# உரிய நேரத்தில் உரத்தை வழங்குங்கள்
## இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க

(கொழும்பு)

இரசாயன உர இறக்குமதிக்கான அனுமதியை தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதன் மூலம் அரசாங்கம் தமது பொறுப்பில் இருந்து விலகி விட முடியாது என இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

சேதன பசளை அல்லது இரசாயன உரத்தை உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தாம் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அசௌகரியத்திற்கு முகங்கொடுத்துள்ள விவசாயிகளின் நன்மை கருதியே அரசாங்கம் தமது கொள்கைகளில் மாற்றம் கொண்டு வந்தது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக தற்போது தனியார் நிறுவனத்திற்கும் இரசாயன உரத்தினை கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த விடயத்தில் உரிய தீர்மானங்களை எடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளதுடன், அரசாங்கம் என்ற வகையில் தமக்கும் அந்த பொறுப்புள்ளதாக இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார் (நி-5)

E-CITY COLLEGE OF ENGLISH
புத்தாண்டில் 2022 ஆம் கல்வி ஆண்டில் புதிய பிரிவுகள் ஆரம்பம்
நேரடி வகுப்புக்கள் ஆரம்பம்
01.01.2022
Diploma in English at 10.30 AM
Computer Office Management at 11.00 AM
IELTS at 1.30 PM
IELTS LIFE SKILLS A1 at 10.30 AM



E-CITY COLLEGE OF ENGLISH
No-320/3, Pointpedro Road, Anaipanthy, Jaffna.
021 221 7106, 070 771 7106, 077 201 7106
Office Hours
Monday to Wednesday 9.00 AM to 4.00 PM
Saturday and Sunday 8.00 AM to 4.00 PM
Thursday and Friday off | www.ecitycollege.lk
(C-3307)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 89 இற்கும் மேற்பட்ட நாடுகளில் ஒமிக்ரோன் பரவல்

# உலகம் முழுவதும் கட்டுப்பாட்டு நடவடிக்கை தீவிரம்

## உலக சுகாதார அமைப்பு தகவல்

(ஜெனிவா)

**மின்னல் வேகத்தில் ஒமிக்ரோன் பரவுவதால் உலக நாடுகள் பல முடக்கல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன என உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது.**

தென் ஆபிரிக்காவில் பரவத் தொடங்கிய ஒமிக்ரோன் வைரஸ், தற்போது 89 நாடுகளில் பரவியுள்ளது என அவ் அமைப்பு அறிவித்துள்ளது.

இந்நிலையில், டெல்டா வகையை விட ஒன்றரை நாள் முதல் 3 நாளில் ஒமிக்ரோன் வைரஸ் இரு மடங்காக அதிகமாக பரவுகிறது எனவும் தெரிவித்தது.

அத்துடன் இந்த புதிய வகை வைரஸ் பரவும் நாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கு உலகம் முழுவதும் பல்வேறு கட்டுப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

தென் ஆபிரிக்கா, நெதர்லாந்து, பிரிட்டன், இத்தாலி, போர்த்துக்கல், ஸ்கொட்லாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், நைஜீரியா, பிரான்ஸ், இந்தியா, ஐஸ்லாந்து உள்ளிட்ட 89 நாடுகளில் ஒமிக்ரோன் வைரஸ் பரவியுள்ளது.

ஒமிக்ரோன் வைரஸ் பரவிய நாடுகளில் நோயத் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (நி-5)

# சீக்கியர்களின் பொற்கோவில் கருவறைக்குள் அத்துமீறிய இளைஞன் அடித்துக் கொலை



(டில்லி)

இந்தியா பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் நகரில் அமைந்துள்ள சீக்கியர்களின் புனிதஸ்தலமான பொற் கோவிலுக்குள் அத்து மீறி நுழைந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞன் ஒருவர் அங்கிருந்த பக்தர்களால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

பொற்கோயிலுக்குள் உள்ள புனித நூல் மற்றும் வைரம் பதித்த வாள் ஆகி யவற்றை அவமதிக்கும் நோக்கத்தில் அவர் நுழைந்ததாக குற்றஞ்சாட்டி அங்கிருந்த பக்தர்கள் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த அந்த இளைஞரை நேற்று முன் தினம் அடித்து கொலை செய்துள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள பொற்கோவில் சீக்கி யர்களின் புனித தலமாக விளங்குகிறது. இந்த கோவி லுக்கு தினந் தோறும் ஆயிர க்கணக்கான பக்தர்கள் சென்று வழிபட்டு வருகிறார்கள். சீக்கிய குருக்கள் பூஜை செய்வதற்கு தனி இடம் உள்ளது.

அதே போல் அவர்களின் புனித நூல் (குரு கிராந்த் சகிப்) மற்றும் வைரம் பதித்த வாள் ஆகிய வையும் கருவறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கருவறைக்குள் பொதுமக்கள் அனுமதிக்கப் பட மாட்டார்கள். இந்த நிலையில் உத்தர பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், திடீரென கருவறைக்குள் நுழைந்து புனித நூல் மற்றும் வாள் இரண்டையும் எடுக்க முயன்றதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதனால் அங்கு காவலுக்கு நின்ற கோவில் பாதுகாப்பு பணியாளர்கள் அவரை பிடித்து வெளியே கொண்டு வந்தனர். அப் போது கோபம் அடைந்த பக்தர்கள் அந்த நபரை அடி த்து உதைத்தனர். இதில் அந்த நபர் பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து பொலி ஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# 135 வயதான சீனப்பெண் உயிரிழப்பு



(பீஜிங்)

சீனாவின் மிகவும் வயதான நபரான திருமதி அலிமிஹான் செயிட்டி தனது 135 வயதில் உயிரிழந்தார்.

ஜின்ஜியாங் - உய்குர் தன்னாட்சி பிராந்தியத்தில் கடந்த வியாழக்கிழமை அவர் இறந்ததாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சீனாவின் தென்மேற்கு ஜின்ஜியாங்கின் கஷ்கர் நகரை சேர்ந்த அலிமிஹான், 1886, ஜூன் 25 ஆம் திகதி பிறந்தார்.

அலிமிஹான் தான் சீனாவின் மிக வயதான நபர் என சீன அரசு கடந்த 2013 ஆம் ஆண்டு அதிகாரபூர்வமாக அறிவித்தது.

மரணம் அடையும் வரையில் மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்த அலிமிஹான், நேரம் தவறாமல் சாப்பிடுவார். சூரிய ஒளியில் அடிக்கடி அமர்வது அவரது ஆரோக்கியத்திற்கு முக்கிய காரணம் என்று முன்னர் வழங்கிய ஒரு நேர்காணலில் அவர் கூறியுள்ளார்.

அவர் வசித்த கொமுசெரிக் பகுதி, மிக வயதானவர்கள் வாழும் இடமாக கருதப்படுகிறது. இங்கு 90 வயதை தாண்டியும் பலர் வாழ்ந்து வருகின்றனர்.

இதற்கு சுகாதார சேவைகள் சிறப்பாக வழங்கப்படுவதே முக்கிய காரணமாக கூறப்படுகிறது.

இப்பகுதி மக்களுக்கு இலவச மருத்துவ சேவை, ஆண்டுதோறும் உடல் பரிசோதனை, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மாதந் தோறும் உதவித் தொகை உள்ளிட்டவை வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கொரோனா பெருந்தொற்று 2024 வரை நீடிக்கலாம்

## பைசர் நிறுவனம் தகவல்

(வோஷிங்டன்)

ஒமிக்ரோன் வைரஸ் பரவல் காரணமாக கொரோனா பெருந்தொற்று 2024 ஆம் ஆண்டு வரை நீடிக்கலாம் என்று கொரோனாத் தடுப்பூசியை உருவாக்கிய நிறுவனங்களில் ஒன்றான பைசர் தெரிவித்துள்ளது.


தென் ஆபிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ள புதிய வகை உருமாறிய கொரோனாவான ஒமிக்ரோன் வைரஸ் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது.

மிகவும் வேகமாக பரவும் தன்மை கொண்ட இந்த வைரஸ் குறுகிய காலத்தில் பல்வேறு நாடுகளுக்கும் பரவி உள்ளது. குறிப்பாக இங்கிலாந்தில் பரவி உள்ள ஒமிக்ரோனால் அங்கு தினசரி பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்தபடியே உள்ளது.

இது குறித்து பைசர் நிறுவனத்தின் தலைமை அறிவியல் அதிகாரி மைக்கேல் டோல்ஸ்டன் தெரிவிக்கையில்,

அடுத்த ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகளில் சில பிராந்தியங்களில் கொரோனா நோய்த் தொற்று நிலை தொடரும் என்று எதிர் பார்க்கிறோம். 2024 ஆம் ஆண்டில் கொரோனாப் பெருந் தொற்று உலகம் முழுவதும் பரவும் என்று கணித்திருக்கிறோம்.

இது எப்படி சரியாக நிகழும் என்பது நோயின் பரிமாணம், தடுப்பூசிகள் மற்றும் சிகிச்சைகள் எவ்வாறு திறம்பட நடைமுறைப்படுத்தப்படுகிறது, தடுப்பூசி குறைவாக உள்ள இடங்களுக்கு சமமான தடுப்பூசி விநியோகம் ஆகியவற்றை பொறுத்து அமையும் என அவர் தெரிவித்தார். (நி-5)



கொடைக்கானலில் கிறிஸ்மஸ் மற்றும் ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் பிஸ்கட்டு களால் வானிலை ஆராய்ச்சி மையம் கொடைக்கானலில் உருவாக்கப்பட்டுள் ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி 22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021

# தரம் மிக்க ஆசிரியர் தலையங்கம் வலம்புரியின் வெற்றிக்கு காரணமாகியது

## யாழ். ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை பாராட்டு

வலம்புரி பத்திரிகை 23ஆவது ஆண்டில் காலடி பதிக்கின்ற மகிழ்வான வேளையில் மக்களுக்கான இந்த மகத்தான பணியை ஆற்றும் வலம்புரி பத்திரிகை நிர்வாக இயக்குநர் திரு. சி. வெற்றிவேலாயுதம், திரு. க. திருமாலழகன், ஆசிரியர் திரு.ந.விஜயசுந்தரம் மற்றும் துணை ஆசிரியர்கள் - செய்தியாளர்கள் - ஊடகப் பணியாளர்கள் ஆகியோர் அடங்கிய வலம்புரிக் குடும்பத்தினரைப் பாராட்டி தொடருங்கள் தங்கள் மகத்தான பணியை என முதலில் வாழ்த்துகிறோம்.

ஒரு ஊடகத்தின் முக்கிய பணி வாசகர்கள் மத்தியில் ஒரு கருத்துருவாக்கத்தை உருவாக்குவதாகும். நடக்கும் சமகால நிகழ்வுகளைப் படிக்கும் வாசகர்கள் அவற்றை வைத்து தம் வாழ்விற்கான அரசியல், சமூக, பொருளாதார மற்றும் இதர விடயங்களுக்காக என்ன முடிவுகளை எப்படி எடுக்க வேண்டும் அதற்கு ஏற்ற விதமாக எப்படித் தம் வாழ்வை நகர்த்த வேண்டும் என்பவற்றை செய்திகள் மூலம் தத்ரூபமாக வழிகாட்ட வேண்டிய பணியை வலம்புரிப் பத்திரிகை மிகச்சிறப்பாக ஆற்றுகிறது என்பதை அதன் செய்தி அறிக்கையிடலின் நுட்பத்திலும் நுணுக்கத்திலும் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

வலம்புரிப் பத்திரிகை தனது ஆரம்பம் முதல் பல கடின போராட்டங்கள் மத்தியில் பல சவால்களைச் சந்தித்து சாதனை படைத்து தனக்கென உறுதியான ஓரிடத்தை வடபகுதித் தமிழ் மக்கள் மத்தியில் பெற்றுள்ளது என்பது பெருமையுடன் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

வலம்புரிப் பத்திரிகையின் அச்சுப் பதிவு துல்லியமாக உள்ளது - செய்திகள் வெட்டொன்று துண்டு இரண்டாகத் தெளிவாக உள்ளன - செய்தித் தலைப்புக்கள் கவர்ச்சிகரமாக வுள்ளன - பக்க வடிவமைப்பு கண்ணைக் கவரும் விதமாக உள்ளது - படங்கள் அச்சொட்டாகத் தெளிவாக உள்ளன - எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற் போல் ஆசிரியர் தலையங்கம் அமைகின்றது.

வலம்புரிப் பத்திரிகையின் பல்வகைப் பலங்களில் அதன் தரம்மிக்க ஆசிரியர் தலையங்கமும் ஒன்று என்பது இன்று பலரும் அறிந்த உண்மை ஆகும். அதுவும் வலம்புரிப் பத்திரிகையின் பலமான இருப்பிற்கும் விற்பனைக்கும் ஒரு முக்கிய காரணமாகும்.

இந்த நிலையில் நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



என்ற மகுட வாக்குடன் வெற்றி நடை போடும் வலம்புரி பத்திரிகை தனது ஊடக கருத்துருவாக்கப் பணியை தொடர்ந்து இன்னும் சிறப்பாக ஆற்ற வேண்டும் என இறையாசிர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

# வலம்புரி வாசகர் மத்தியில் அசைக்கமுடியாத இடத்தைப் பெற்று வெற்றி நடை போடுகிறது

## பிசப் சவுந்தரம் மீடியா இயக்குநர் கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை



வலம்புரி பத்திரிகை தனது 22 ஆவது அகவையில் கால்பதிக்கும் வேளை வலம்புரி பத்திரிகையின் 22 ஆண்டு கால நீண்ட பயணப் பாதையில் நெருங்கி இணைந்திருந்தமையால் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்வடைகிறேன்.

ஒரு மருத்துவர் நோயாளியின் கையைப் பிடித்து நாடி அறிந்து மருத்துவம் செய்வதுபோல, ஒரு பத்திரிகை ஆசிரியர் மக்களின் நிலையறிந்து அவர்களின் தேட்லுக்கேற்ப சமகாலச் செயதிகளை அறிக்கையிட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

தாம் வாழும் சமூக அமைப்பிற்குள் நின்று கொண்டு சிலவேளைகளில் தமக்கும் பாதகமான செய்திகளை அறிக்கையிட வேண்டிய இக்கட்டான நிலையில், செய்தியாளர்கள் இருக்கும் போது துல்லியம் - நடுவுநிலைமை - பக்கம் சாராமை என்ற பத்திரிகை யியல் கோட்பாடுகளைப் பிரமாணமா கக் கடைப்பிடிப்பது கடினமாகிறது.

ஆனால் இந்த மனித நிலைகளைத் தாண்டி செய்தியாளர்கள் நிலை தளராது செயற்பட அவர்களை நெறிப்படுத்த வேண்டியவர் ஆசிரியர்.

இப்பணியைவலம்புரி பத்திரிகை அதன் ஆசிரியரின் வழிகாட்டலில் மிகவும் சிறப்பாகவே ஆற்றி வருகிறது. இதனால்தான் வலம்புரி பத்திரிகை வடபகுதி வாசகர்கள் மத்தியில் அசைக்க முடியாத இடத்தைப் பெற்று 22 ஆண்டுகளைத் தாண்டியும் வெற்றி நடைபோடுகிறது.

2006 ஆண்டு காலப்பகுதியில் நான் யாழ் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் ஊடக கல்வி இணைப்பாளராகவும் ஊடக விரிவுரையாளராகவும் பணியாற்றிய போது வலம்புரி பத்திரிகை ஆசிரியர் ந.விஜயசுந்தரம் அவர்களும் அங்கு ஊடக விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

விரிவுரைகளின் இடைவேளையில் எல்லோரும் தேநீர் அருந்த அருகில் உள்ள கடைக்குப் போவர். நான் மட்டும் எங்கும் போகாது அமர்ந்திருப்பதைக் கவனித்த அவர் என்னை தேநீர் அருந்த வரும்படி அழைத்தார்.

பொதுவாக வெளியிடங்களில் தேநீர் மற்றும் உணவு அருந்த நான் போவதில்லை என்றாலும் வலம்புரி பத்திரிகை ஆசி ரியர் ந.விஜயசுந்தரம் அவர்கள் அழை த்தபோது அருகில் உள்ள கடைக்கு தேநீர் அருந்த அவருடன் பல தடவை கள் போனேன். அது ஒரு இனிமையான அனுபவமானது. எமது நட்பும் இன்னும் நெருக்கமானது.

பாதுகாவலன் பத்திரிகையில் ஆசிரி யப்பணி புரிந்தபோது நடத்திய எல்லா ஊடக கருத்தரங்குகளிலும் அவர் கலந்து கொண்டு விரிவுரைகளை நடத்தியுள்ளார்.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் ஊடக வகுப்புகளிலும் விரிவுரைகளை ஆற்றியுள்ளார். எனது ஊடக புத்தக வெளியீடுகளிலும் கலந்து ஆய்வு ரைகளை நடத்தியுள்ளார்.

வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியர் ந.விஜயசுந்தரம் அவர்கள் சொல்ல விரும்பும் விடயத்தை நுட்பமாக தெளிவாக தத்ரூபமாக கவனத்தை கவரும் வகையில் சொல்வதில் வல்லவர்.

இவரின் அந்த வல்லமையை இவரின் ஆசிரியர் தலையங்கங்களில் காணலாம். எனது ஆசிரியர் தலையங் கங்கள் ஒரு அறிமுகம் என்ற நூலில் இவரின் ஆசிரியர் தலையங்கங்கள் பற்றித்தெளிவாக ஆய்வு செய்துள்ளேன்.

யாழ் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரைகளிலும் வேறு விரிவுரைகளிலும் இவரின் ஆசிரியர் தலையங்கங்கள் பற்றி கற்பித்துள்ளேன். நான் பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியராக இருந்து அதன் 125 ஆவது ஆண்டு நிறைவை 2001ஆம் ஆண்டு கொண்டாடியபோது பாதுகாவலன் பத்திரிகையையும் என்னையும் இணைத்து ஒரு ஆசிரியர் தலையங்கம் எழுதியிரு ந்தார்.

வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கங்கள் பலராலும் விரும்பிப் படிக்கப்படுகின்றன. பல இணையத்தளங்களில் வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கங்கள் மறுபிரசுரம் செய்யப்படுகின்றன.

சில இணையத்தளங்கள் யாருடையது என்று பெயரைக் குறிப்பிடாமலே மறுபிரசுரம் செய்கின்றன. வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கங்களுக்காகவே இப்பத்திரிகையை வாங்குவோர் இருக்கின்றனர் என்பதை நான் அறிவேன்.

வலம்புரி பத்திரிகையின் ஆசிரியருக்கு, சொல்ல விரும்பும் விடயத்தை நுட்பமாக தெளிவாக தத்ரூபமாக கவனத்தை கவரும் வகையிலும் சொல்லும் வல்லமை இறைவன் வழங்கிய ஒரு கொடையாகும்.

இந்த தனித்துவத்தை வலம்புரிப் பத்திரிகை தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என அன்பு வேண்டுகோள் விடுக்கிறேன்.


வலம்புரி பத்திரிகை 22ஆவது அகவையில் கால்பதிக்கும் வேளை மக்களுக்கான தங்கள் மகத்தான பணியை இறையாசியுடன் தொடருங்கள் என எனது வாழ்த்துக் களையும் பாராட்டுக்களையும் மீண்டும் தெரிவிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி 22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021

# சைவசமயத்தை அரணாக நின்று காத்துவரும் வலம்புரி

## சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன் புகழாரம்



ஈழத்திரு நாட்டின் தனித்துவம் மிக்க பத்திரிகையாக வலம்புரிப் பத்திரிகை விளங்குகின்றது. 1999 ஆம் ஆண்டு போர்ச் சூழலில் இப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை 22 ஆண்டுகள் மக்களின் மனதில் தனித்துவம் பெற்று இப்பத்திரிகையானது தன்பணி தொடர்கிறது.

வலம்புரி பிரதம ஆசிரியர் திரு. நல்லையா விஜயசுந்தரம் அவர்களின் ஆற்றலும், பத்திரிகை நிறுவன பணிப்பாளர்கள் திரு. சி. வெற்றிவேலாயுதம், திரு.க. திருமாலழகன் ஆகியோரின் நன் முயற்சியும் இன்று வலம்புரி, வாசகர்களின் பெருங்கௌரவத்தைப் பெற்று வருகிறது.

வலம்புரியின் வரவுக்காக அயராது உழைக்கும் வலம்புரி பத்திரிகையில் பணியாற்றும் பணியாளர்களின் சீரிய தொண்டை வாழ்த்துகிறேன்.

நீதியை நிதானத்தோடு எடுத்துரைக்கும் வலம்புரி இம் மண்ணில் ஆதிச் சமயமாகிய சைவசமயத்தை அரணாக நின்று காத்து வருவதால், சைவமக்கள் வலம்புரிப் பத்தரிகைக்கு என்றும் நன்றிக்கடன்பட்டவர்கள்.

சைவசமயத்தவர்களை பிறர் ஏமாற்றுகின்ற போது தர்மநெறியில் நின்று உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்கும் பத்திரிகாதர்மம் தொடரப் பிரார்த்திக்கின்றேன்.

வலம்புரியின் ஆசிரியர் கருத்தால் பல நல்ல விடயங்கள் நிறைவேறுவதை நாம் அறிவோம். காலத்தின் தேவையை உணர்ந்து சங்குநாதத்தில் ஆலடி உரையாடல் மூலம் சங்கடங்களை வெளிப்படுத்தும் திறன் கண்டு மகிழ்கின்றோம்.

சான்றோரை மதித்து அவர்களின் கருத்துக்களை உள்வாங்கி வீறு நடைபோடும் வலம்புரி மேலும் பிரகாசிக்க துர்க்கையம்பாளை பிரார்த்திக்கின்றேன். எதிர்காலத்தில் சிறுகதை. நாவல், தொடர்கதை, காப்பியங்கள் தொடர் பான கட்டுரைகள் சிறப்பாக வெளிவர மேலும் வாய்ப்புக்கள் ஏற்படுத்த வேண்டும்.

தமிழ்மக்களை, தமிழர் கட்சிகளை ஒன்றிணைத்து செயற்படுத்தக்கூடிய வகையில் வலம்புரியின் நற்பணி சிறக்க வேண்டும். எமது தொல்லியல் அடையாளங்களை பாதுகாப்பதற்கு வலம்புரி தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும். கடவுளின் கரங்களில் உள்ள நாத ஒலியாகிய வலம்புரி, பத்திரிகையாக எம்மண்ணில் தன் தூய பணியை என்றும் தொடர நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகின்றேன்.

# கல்வியும் ஞானமும்



**பேராசிரியர் தி.குமணன்**
**பொது வைத்திய நியுணர்**
**யாழ்.போதனா வைத்தியசாலை**

**"கல்வி கரையில கற்பவர் நாள் சில**
**மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்**
**ஆராய்த்தமைவுடைய கற்பவே**
**நீரொழியப் பாலுண் குருகின் தெரிந்து"**

என்கிறது நாலடியாரின் 135 ஆவது செய்யுள்.

இந்த ஒரு வெண்பா தற்காலத்துக்குச் சாலவே பொருத்தமானது எனலாம். அதாவது கல்வி எல்லை யில்லாதது. ஆனால் அதனைக் கற்பவர் வாழ் நாட்களோ மிக குறுகியவை. சற்றுப் பொறுமையாகச் சிந்தித்தால் அச்சில நாட்களிலும் பிணிகள் பலவாயிருக்கின்றன.

பாலுடன் நீரும் கலந்து இருக்கும் போது அதிலிருந்து நீரை நீக்கிப் பாலை மட்டும் அருந்தும் அன்னப் பறவையினைப் போல அறிவுடையார் பயனற்ற நூல்களைத் தவிர்த்து கற்கத் தகுந்த நூல்களை மட்டும் ஆராய்ந்து கற்க வேண்டும் என்பது இதன் பொருள்.

முற்காலத்தில் நூல்கள் மட்டுமே அறிவுக்கு ஆதாரமாக விளங்கியது. ஆனால் இன்றோ நூல்களுக்கு மேலதிகமாக இணையவழி கல்வி மேலோங்கி நிற்கின்றது. நூல்களை எவ்வாறு தெரிய வேண்டுமோ அதே போன்று இணையவழி கல்வியினையும் தோந்து கற்க வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகின்றது.

செழுமையான கல்வி என்பது காலத்தின் தேவை. அதுவே மனித வாழ்வுக்கு ஆதாரம் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் அவ்வாழ் கைக்கு வளமளிக்கும், வாழ் வாதாரத் திற்கும் வழிசமைக்கும் கல்வி மட்டும் மனித குல மேம்பாட்டுக்கு போதுமா னதா..?

**"கற்றதனால் ஆய பய னென் கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் 'எனின்"** என்கிறது பொய்யாமொழி.

அதாவது தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால் அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன? என்பதே அதன் பொருள்.

எனவே தான் கல்வியுடன் ஆன்ம ஈடேற்றத்திற்குரிய ஞானத்தையும் ஒருங்கே பெறுவதுதான் தனிமனித வாழ்வுக்கும் சமூக மேம்பாட்டிற்கும் வழிசமைக்கும்.

பூவும் மணமும் போல, ஒலியும் ஒளியும் போல ஞானத்தையும் கல்வியையும் ஒருங்கே பெறவேண்டும். அதைத்தான் மணிவாசகப்பெருந் தகை சிவபுராணத்தில் "அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!" என்று குறிப்பிடுகின்றார். நல்லறிவானது எப்போதும் ஞானத்தையும் ஈட்ட வல்லது, அஞ்ஞான இருளை அகற்றும் திறன் கொண்டது.

**"அரிது அரிது, மானிட ராய் பிறத்தல் அரிது**
**மானிடராய் பிறந்த காலையின்**
**கூன் குருடு செவிடு பேடு நீங்கி பிறத்தல் அரிது**
**கூன் குருடு செவிடு பேடு நீங்கி பிறந்த காலையின்**
**ஞானமும் கல்வியும் நய த்தல் அரிது"**

என்று கூறிப் போந்தார் தமிழ் மூதாட்டி ஔவையார்.

ஞானமும் தவமும் ஒருங்கே கைவரப்பட்டவரது வாழ்வு என்றுமே பிரகாசிக்கக்கூடியது. இவ்வுலகில் செயற்கரிய காரியங்களைச் செய்த மெஞ்ஞானிகளாகட்டும் அல்லது விஞ்ஞானிகள் ஆகட்டும் இந்த இரண்டையும் ஒருசேர பெற்றவர்களே ஆவர்.

உதாரணத்திற்கு இங்கு இரண்டு யுக புருஷர்களை உற்று நோக்கலாம். முதலாமவர் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து இந்தியத் துணைக்கண்டத்தில் இருந்த இளைய சமுதாயத்தையெல்லாம் தன் அபரிமிதமான அறிவாற்றலாலும் ஆன்மிக நெருப்பாலும் தூண்டிவிட்ட வீர துறவி சுவாமி விவேகானந்தர். விவேகானந்தரின் அறிவாற்றல் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் எனும் ஆன்மிக கடலால் மெருகேற்றப்பட்டு உலகம் வியக்கும் ஒரு உத்தமரை உலகுக்கு தந்தது. அன்று அவர் ஆயிரக் கணக்கான மேலைத்தேசத்தவர்கள் முன் சிக்காக்கோ நகரில் ஆங்கிலத்தில் ஆற்றிய உரை இன்றைய அமெரிக்க ஜனாதிபதியையும் திரும்பிப் பார்க்க வைக்கின்றது. அன்று இராமகிருஷ்ணரால் அளிக்கப்பட்ட வழிகாட்டலே சுவாமி விவேகானந்தரை அந்த அளவிற்கு உயரத்தில் கொண்டு சென்று ஞானப்புனலாக்கியது.

அடுத்ததாக நம் கண் முன்னே 20, 21ஆம் நூற்றாண்டில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து உலகம் போற்றும் விஞ்ஞானியாகிய இந்திய குடியரசின் ஜனாதிபதியான அப்துல் கலாமை குறிப்பிடலாம். ஒரு இளம் பொறியியலாளராக தோல்வியால் நொந்து போயிருந்த அப்துல் கலாமிற்கு அன்று ரிஷிகேஷில் சுவாமி சிவானந்தரின் தரிசனம் கிடைத்தது. சுவாமியுடன் சில நிமிட நேரங்கள் அவர் பெற்ற கீதா உபதேசமும் பின்னர் அவர் வாழ்வில் பின்னிப் பிணைந்த திருக்குறளும் சாதாரணமாக அவதரித்த ஒரு இந்திய குடிமகனை பத்மபூஷன், பத்ம விபூஷன், பாரத ரத்னா எனப் பல விருதுகளுக்கு சொந்தக்காரனாக்கி இந்தியா வரலாற்று சாதனையான ஏவுகணை செலுத்துவதற்கு மூலாதாரமாக விளங்கி ஈற்றில் இந்திய ஜனாதிபதியாக அரியணை ஏற்றி வைத்தது. அது மட்டுமல்ல ஒரு முஸ்லிம் குடிமகனாக பிறந்து சர்வமத கோட்பாடுகளை தன்னகத்தே உள்வாங்கி ஒரு ஞான ஜோதியாக வாழ்ந்துகாட்டினார்.

இந்த இருவருடைய வாழ்விலும் இரண்டு மகத்தான ஞான ஒளிவிளக்குகள் அவர்களுக்கு வழிகாட்டின. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கூட கடையிற் சுவாமிகளை குருவாக ஏற்றுக் கொண்டார்.அவர் தன் ஆத்ம குருவைப்பற்றி குறிப்பிடுகையில்,

**"ஞாயிற்றைச் சங்கிலி யால் அளக்கலாமோ?**
**ஞான குரு புகழினை நாம் வகுக்கலாமோ?**
**ஆயிரம் நூல் எழுதி னாலும் முடிவுறாதாம!**

என்று குறிப்பிடுகின்றார்.

எல்லோருடைய வாழ்விலும் இப்படி ஆன்மிக குரு அல்லது ஞான விளக்குகள் கிடைக்கா விடினும் இன்றைய பேரிடர் காலத்தில் பெற்றோர்களும் நல்லாசான்களும் நமது இளைய சமுதாயத்திற்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் தத்தமது மதங்கள் வழிகாட்டும் நெறியில் நின்று ஆன்மிகத்தையும் நல்லறத்தையும் போதிக்க வேண்டும்.

ஞானம் இல்லா கல்வி நற்பேற்றை அளிக்காது என்பதை மனதில் கொண்டு இன்றைய சமுதாயத்தை வழி நடத்துவது நமது ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலம்புரி 22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021





22 ஆவது அகவையை முன்னிட்டு எமது நல்வாழ்த்துக்கள்

மக்கள் நலம் பேணும் ஆரோக்கிய ஆலயம்

ருகின்ஸ் வைத்தியசாலை (தனியார்) வரையறுக்கப்பட்டது
රූබින්ස් රෝහල (පෞද්ගලික) සීමාසහිත
RUHBINS HOSPITAL (PRIVATE) LIMITED



தற்காலத்திற் கேற்ப அனைத்து
நவீன மருத்துவ வசதிகளுடன்
24 மணி நேரமும்
சேவை வழங்கும்
" தூங்கா நிலையம்"



**24 மணிநேர சேவைகள்**

வெளிநோயாளர் பிரிவு (OPD)
அவசர சிகிச்சைப்பிரிவு ( ETU )
சிறுநீர். இரத்தப் பரிசோதனைகள்
மருந்தக சேவை ( Pharmacy )
ECG பரிசோதனை
நோயாளர் காவு ஊர்தி ( Ambulance )

**ஏனைய வசதிகள்**

ஸ்கானிங் ( Ultra Sound ), ECHO
கதிர்ப்படப்பிரிவு ( x-ray )
சத்திரசிகிச்சை பிரிவு (Operation Theatre)
நோயாளர் விடுதி வசதிகள் (Ward)

**சகல துறைசார் வைத்திய நிபுணர்களின் சேவைகள்...**

பொதுவைத்திய நிபுணர்கள், பொதுசத்திரசிகிச்சை நிபுணர்கள், நரம்பியல் வைத்திய நிபுணர்கள்,மகப்பேற்று வைத்திய நிபுணர்கள், எலும்புமுறிவுசத்திரசிகிச்சை நிபுணர்கள், தோல் வைத்திய நிபுணர்கள், கண்வைத்திய நிபுணர்கள்,காது,மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர்கள், பல்வைத்திய நிபுணர்கள், குழந்தை வைத்திய நிபுணர்கள்,இருதய வைத்திய நிபுணர்கள், உளநல வைத்திய நிபுணர்கள், கதிரியல் வைத்திய நிபுணர்கள்,நீரிழிவு அகம் சுரக்கும் தொகுதியியல் வைத்திய நிபுணர்கள், சுவாசப்பாதை நுரையிரல் வைத்திய நிபுணர்கள்,குடும்ப நலவைத்திய நிபுணர்கள், சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர்கள், பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர்கள்,மூட்டுவாத மற்றும் மீளமைப்பு நிபுணர்கள்,நரம்பியல் சத்திரசத்திரசிகிச்சை நிபுணர்கள்

**மற்றும் சிறப்பு வைத்திய சேவைகளாக**

குழந்தையின்மை நலசிகிச்சை, செயற்கை கருக்கட்டல் கருவளச்சிகிச்சை மற்றும் மகப்பேற்று பெண்ணியல் வைத்திய நிபுணத்துவ சேவை



"மக்கள் சுகவாழ்வே எமது நிறுவனத்தின் இலக்கு"

(C-3298)

160, பருத்தித்துறை வீதி, நெல்லியடி, யாழ்ப்பாணம், இலங்கை.
160, පේදුරුතුඩුව පාර, නෙල්ලියඩි, යාපනය, ශ්‍රී ලංකා.
160, Point Pedro Road - Nelliady, Jaffna - Sri Lanka.
+9421 226 1500 / +9421 492 7232
www.ruhbinshospitals.com
admin@ruhbinshospitals.com

Ruhbins Hospital


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி
# 22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி
# 22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி 22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச்செய்தி

வலம்புரிப் பத்திரிகை இன்று 22 ஆம் ஆண்டு அகவை அடைந்திருப்பதை யொட்டி மகிழ்ச்சியடைகின்றோம். நடுவுநிலை தவறாமல் செய்திகள் அனைத்தையும் தினமும் அனைத்து மக்களுக்கும் தெரிவித்து வெளிவருவது மிகவும் மகிழ்ச்சி.

தலைப்புச் செய்திகள், கல்வி, பொருளாதாரம், அரசியல், ஆலய விழாக்கள் போன்ற அனைத்து விடயங்களையும் வெளிக்கொண்டுவந்து, அனைவர் மனதையும் வலம்புரி வெற்றி கொண்டுள்ளது. அகவை 22 ஐ நிறைவு செய்து 23 இல் காலடி வைப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். பணி தொடர வாழ்த்துக்கள்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,**
**இரண்டாவது குரு மகா சந்நிதானம்.**



## தமிழ் மண்ணில் தர்மத்தின் குரலாக ஒலிக்கும் வலம்புரி

தமிழ்த் தேசிய நாளிதழாக மிளிர்வது வலம்புரி. காலத்தின் தேவை அறிந்து அனைத்து தமிழ் மக்களுக்கும் இந்துக்கள் மற்றும் ஏனைய மதம்சார்ந்த மக்களுக்கும் ஒவ்வொரு நாளும் பொழுது புலரும் விடியல் நல்ல நேரத்தில், நற்செய்திகளை தாங்கி வெளிக்கொண்டு வரும் வலம்புரி-சங்குநாதம் யாழ். தமிழ் மண்ணில் இருந்து தர்மத்தின் குரலாக ஓங்கி ஒலித்து கடந்த இருபத்திரண்டு ஆண்டுகள் அர்ப்பணிப்பாகப் பணி செய்து 20.12.2021 இன்று முதல் அகவை 23 இல் கால்பதிப்பது மக்களின் மனதில் மதிப்பு தரும் ஒரு செய்தியாகும்.

நடுவுநிலை தவறாத தமிழ் நாளிதழாக மிளிரும் வலம்புரி-சங்குநாதம் பார்த்தசாரதியாகிய கண்ணன் கையில் இருந்து ஒலிக்கும் சங்கு போல் ஓங்காரமாக உண்மைச் செய்திகளை உள்ளபடி வெளிக்கொணர்கின்றது.

அரசியல் சார்புகள் இல்லாமலும், சமய சார்பு அற்றும் பத்திரிகை தர்மத்திற்கு அமைவாக வெளிவரும் செய்திகள் வலம்புரியின் சிறப்பு அம்சமாகும். உள்நாட்டு செய்திகள், வெளிநாட்டு செய்திகள், உண்மைத் தகவல்கள் உடனுக்குடன் வெளிக்கொணர்வதும் இதன் சிறப்பாகும்.

அத்துடன் அறிவியல் சார்ந்த கட்டுரைகள், மாணவர்க்குப் பயனுள்ள கல்விச் செய்திகள், தகவல்கள், சமயக் கட்டுரைகள், சிறுவர் அரங்கம், மகாபாரதம் போன்ற போதனைகள் உள்ளடக்கமாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக தர்மத்தின் குரலாக ஆசிரியர் தலையங்கமும் இன்று ஒரு தகவலையும் பிரசுரிப்பதன் மூலம் வலம்புரி தனித்துவத்தையும்-தனக்கு என்று ஓர் இடத்தையும் மக்கள் மனதில் பிடித்துள்ளது.

வலம்புரி- சங்குநாத வார இதழில் சிறப்பம்சமாக, ஆலடி மாநாடு, வியாசர் பதில் சிறப்புடையவை. சோதிடம், கவிதைகள், விளம்பரச் செய்திகள் பயனுள்ளவை. இன்று தனது இளமைப்பருவத்தின் அகவை 22 உத்வேகத்துடன் வெளிவந்து உலகத் தமிழர்களின் மனதில் இடம்பிடித்து கைகளில் தவழ்வது பெரும்பேறாகும். எங்கள் அபிமான பத்திரிகை, என்றும் அழகாக வெளிவந்து அளப்பரிய சேவையாற்றி அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த வேண்டும் என்று வாழ்த்தி வலம்புரியின் வளர்ச்சியில் மிக்க பங்குகொள்ளும் நிர்வாக அதிகாரி, செயற்பாட்டாளர், பிரதம ஆசிரியர், ஆசிரியர்கள், செய்தியாளர்கள் உள்ளக, வெளியக பணியாளர்கள் அனைவருக்கும்-வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்து 100 ஆண்டுகளுக்கு மேல் சிறப்புமிகு பல்துறை சார்ந்த ஊடகமாக தமிழ் மண்ணிற்கும், சைவ உலகிற்கும் தர்மத்தின் குரலாகவும், காவலனாகவும் மிளிர வேண்டும் என்று மார்கழி ஆதிரை நன்னாளில் சிவனருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம். சர்வதேச இந்து குருமார்கள் சார்பாக நல்லாசிகளை தெரிவிக்கிறோம்.

**கலாநிதி. சிவஸ்ரீ.**
**து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் (ஜே.பி)**
**தலைவர், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம்,**
**சோதிட ஆலோசகர்.**



## பேராயரின் வாழ்த்துச் செய்தி

வலம்புரி பத்திரிகை 22 வருட சேவையை நிறைவு செய்து 23 ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்றது என்று அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன்.

1841 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் எத்தனையோ பத்திரிகைகள் தோன்றி மறைந்து விட்டன. ஆனால் வலம்புரி இப்பொழுது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து அரிவை பருவத்தை அடைந்து விட்டாள்.

பத்திரிகைக்கு மூன்று முக்கியமான கடமைகள் உண்டு. செய்திகளை உடனடியாகவும் உண்மையாகவும் எடுத்துரைப்பது, இரண்டாவதாக நிகழ்ச்சிகளைப் பதிவு செய்கின்றது. இது வரலாற்று ஆசிரியனுக்கு முக்கியமான நூலாகும். மூன்றாவதாக பொதுசன அபிப்பிராயத்தை தலையங்கம் மூலமாகவும் கட்டுரைகள் மூலமாகவும் உருவாக்குவது. இந்த மூன்று கடமைகளையும் வலம்புரி - சங்குநாதம் சரியாகச் செய்கின்றமை கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

வலம்புரி பத்திரிகையில் செய்திகள் மட்டுமன்றி மக்களை சிரிக்க வைக்கும் துணுக்குகளும் அரசியல் விமர்சனங்களும் காணப்படுகின்றன. வலம்புரி - சங்குநாதம் காலையில் தமிழ்பேசும் மக்களிற்கு அவசியமான ஒரு பொருளாக அமைந்துவிட்டது. இப்பத்திரிகையின் சேவை தளர்வின்றி மக்களுக்கு கிட்டவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**பேராயர் எஸ். ஜெபநேசன்,**
**தென்னிந்திய திருச்சபை.**



## சைவசமயத்தின் பாதுகாவலன்

அரசியல், அறிவியல், ஆன்மிகம் என ஒருங்கே நடுநிலையுடன் வெளிவருகின்ற வலம்புரியை வாழ்த்துவதில், ஆசிர்வதிப்பதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

ஆரம்பித்து 22 வருடங்களை கண்டிருப்பது மக்களின் பெருவிருப்பிற்குரியது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

வலம்புரியின் மகுடம்போல் அமைந்தது ஆசிரிய தலையங்கம்தான். தலையங்கம் வாசிப்பதற்கென்று பத்திரிகை வாங்குபவர்கள் வலம்புரிக்குத்தான் இருக்கின்றார்கள். வலம்புரி, சங்குநாதத்தில் வெளிவரும் அத்தனை பகுதிகளும் சிறப்புப்பொருந்தியதாகும்.

தமிழினம் விடிவை நோக்கிய பயணத்தில் அழிப்பு, ஆக்கிரமிப்பு, அடக்குமுறை, ஏமாற்று என அனைத்தையும் சந்தித்தது. இவ்வேளையில் காலம் அறிந்து பணியாற்றி தமிழனத்தின் விம்பமாக விளங்கி வருவது வலம்புரியாகும். வலம்புரி மக்களின் குரல், மக்களின் உணர்வு, மக்களின் தொண்டன் ஆவான்.

சைவசமய பாதுகாவலனாகவும் வலம்புரி திகழ்கின்றது. அதேவேளையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏனைய மதங்களைப் புண்படுத்தி செய்தி வெளியாக்குவதில்லை என்பதையும் பெருமையாகக் கூறவேண்டும்.

மதத்தினை வைத்து மக்கள் விரோதிப்பதை வலம்புரி ஒருநாளும் விரும்பியதில்லை. அநாதையாக நிற்கும் சைவத்திற்கு அரணாகத்திகழும் வலம்புரிக்கு இறையாசிகள்.

வலம்புரியின் ஆசிரியர் மற்றும் வலம்புரி குடும்பத்தினருக்கு சைவத்தமிழ் உலகின் சார்பில் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

எல்லாம் வல்ல வீணாகான குருபீடம்பதி உறையும் ஸ்ரீசரஸ்வதி அம்பாளின் திவ்யமான திருவருள் வலம்புரியின் பணிகளுக்கு என்றென்றும் துணை நிற்கும் எனக் கூறி ஆசிர்வதிக்கின்றேன்.

**சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்,**
**குருமுதல்வர், வீணாகான குருபீடம், சித்தன்கேணி.**
**ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில்,**
**சண்டிலிப்பாய்.**



## தர்மசாஸ்தா குருகுல அதிபரின் ஆசிச்செய்தி

வலம்புரி என்ற சொல்லே தெய்வீகமானது. மங்கலகர மான அந்தப் பெயருடன் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட செய்திப் பத்திரிகையானது நன்முறையில் வளர்ச்சி பெற்று இன்று இருபத்தி இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்தி ருக்கிறது.

இது பெருமைக்குரிய விடயம். மகிழ் ச்சியுடன் வாழ்த்துவதில் மனநிறைவு கிட்டுகிறது.

மக்களுக்கு நாட்டு நடப்புக்களையும் அரசியல் விவகாரங்களையும் உள்ளது உள்ளபடி தெரிவிப்பது செய்தித்தாள்களின் பணி. அதற்கும் அப்பால் சமூக நிலைமைகளைப் புரிந்துகொண்டு வாழ்வதற்கேற்ற வழிகாட்டல்களை வழங்குவதும் அவர்களுக்கான கடமை.

"வலம்புரி" அவற்றை செம்மையாகச் செய்து வருகின்றது. அதனால் இன்று உலகெங்குமுள்ள தமிழ்மக்கள் விரும்பிப்படிக்கும் பத்திரிகையாக "வலம்புரி" வளர்ச்சி பெற்றிருக்கிறது.

இருபத்து மூன்று வயதில் காலடி எடுத்து வைக்கும் "வலம்புரி" மேலும் வளர்ச்சி பெற்று பல்லாண்டுகள் வெளிவந்து மக்களுக்குச் சேவையாற்ற வேண்டுமென ஆசி கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ.தா.மகாதேவக்குருக்கள்,**
**அதிபர், தர்மசாஸ்தா குருகுலம்,**
**காயத்ரீ பீடம், இணுவில்.**



## வலம்புரி நாளிதழ் நற்றமிழ் தேசியத்தின் பலம்

இன்றைய உலகின் நவீன தொழில்நுட்பங்களின் வளர்ச்சியால் அதி விரைவில் செய்திப் பரிமாற்றங்கள் நிகழ்கின்றன. ஆனால் தொழில்நு ட்ப சாதனங்கள், அவற்றை இயக்கும் அறிவு ஆகியவ ற்றின் பயன்பாடு குறைவால் அச்செய்திகளை அனை வரும் அறிந்து கொள்ள முடிவதில்லை. அதுமட்டுமல் லாமல் செய்திகளின் நம்பகத்தன்மையையும் சமூக வலைத்தளங்களிலும் பார்க்க பத்திரிகைகளே உறுதிப் படுத்தி நிற்கின்றன.

இவற்றை நிறைவு செய்யும் முகமாக எமது பத்திரிகைகள் பல செய்திகளையும் சேகரித்து அன்றாடம் வெளியிட்டு வருவது செய்திகளை அறிய விரும்பும் ஆர்வலர்களுக்கு வசதியாக அமைகின்றது.

இந்தவகையில் எமது நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் பத்திரிகையான வலம்புரி கடந்த இருபத்தி இரண்டு ஆண்டுகளாக மக்கள் மனம் கவரும் பத்திரிகையாக வளர்ச்சியடைந்து வருவது பாராட்டத்தக்கதாகும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் பலரையும் ஈர்க்கும் வகையில் பல கதைகள், கட்டுரைகள், கவிதைகள் ஆகியவற்றைத் தாங்கி "சங்குநாதம்" வெளிவருவது சிறப்பாகும்.

அன்றாட அரசியல், சமூக, கள நிலைவரங்களை எமது புராண, இதிகாச மற்றும் அறிவியல் கதைகளுடன் தொடர்புபடுத்தி வெளிவரும் ஆசிரியர் தலையங்கம், அரசியல், சமூக நிலைமைகளை அலசி ஆராயும் கட்டுரைகள், ஆன்மிக சிந்தனைகள், மருத்துவக் குறிப்புக்கள், விளையாட்டு, சிறுவர் அரங்கம் மற்றும் எமது சமூகத்தில் உள்ள பிரச்சினைகள், சவால்கள் ஆகியவற்றைச் சுவாரஸ்யமாக பேச்சு வழக்கு மொழியில் உரையாடலாக வெளிப்படுத்தும் "ஆலடி மாநாடு" எனப் பலவகைச் செய்திகளைத் தாங்கி வெளிவரும் வலம்புரி- சங்குநாதம் வாசகர்களின் ஆவலைத் தூண்டி வாசிக்கச் செய்கின்றன.

இன்று இருபத்து மூன்றாவது ஆண்டில் கால்பதிக்கும் வலம்புரி மேலும் பலகாலம் நின்று நிலைத்து தன் பணியைத் தொடரவும் இன்றைய மலர் சிறப்பாக வெளிவரவும் திருவருளை வேண்டி எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானை பக்தியுடன் பிரார்த்திக்கின்றோம்.

நன்னெறி வலம்புரியே வாழி! வாழி!!
நற்றமிழ் தேசியத்தின் பலமே வாழி! வாழி!!

**இறை பணியில் தவத்திரு வேலன் சுவாமிகள்,**
**சிவகுரு ஆதீனம், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி

# 22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021



## செய்திப் பதிவிடலில் வலம்புரிக்கு நிகர் வேறில்லை

கடந்த 22 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் இருந்து "நடுவு நிலை தவறாத நன் னெறி காக்கும் உங்கள் நாளிதழ்" என தர்மத்தின் குரலாக சங்கொலி எழுப்பும் வலம்புரி இன்றைய தினத்தில் தன் அசுர வளர்ச்சியில் 23ஆம் அகவையில் படி ஏறுகின்றது. சங்கும் ஒலியும் என வார இறுதியில் சங்குநாதமாக ஒலித்து எழும் வலம்புரியின் பெருமையோ பெருமை.

அரசியலை ஆலடி மாநாட்டுடனும் அழுத்தமான தலையங்கங்கள் மூலமாகவும் சமூக நிகழ்வுகளை தெளிவான ஆதாரப் படங்கள், தெள்ளிய செய்திகள் வாயிலாகவும் வாசகர் கரங்களில் சேர்ப்பது வலம்புரியின் வனப்பும் வளர்ப்பும் ஆகும்.

கடந்து போன காலங்களில் நிகழ்ந்த எத்தனையோ நிகழ்வுகளை அவ்வப்போதே உயிர்த்துடிப்புடன் காத்திரமான தாக்கங்களுடன் ஒலித்தது வலம்புரியின் வல்லமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். கடந்த 22 வருடங்களாக மக்கள் விரும்பும் மக்கள் மனம் கவர்ந்த செய்திகளை பொறுப்புடனும் பொலிவுடனும், தன்னார் வத்துடனும் பதிவிடலில் வலம்புரியை விஞ்ச எவரும் இல்லை.

வாரமலரான சங்குநாதம் அரசியல், சமூகம், சிறுவர் பகுதி, இதிகாசம், கவிதைமேடை, வியாசர் பதில்கள், இராசி பலன்கள், பேஸ்புக்கில் பிடித்தவை என எல்லாத் தரப்பினரையும் கவர்ந்திழுத்து கட்டுக்குள் வைக்கும் கலை தெரிந்தவனான வலம்புரி , தமிழர் மனங்களில் ஓர் உயர்ந்த இடத்தில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக் கின்றான்.

அதன் சேவை செழிக்கவும் , மேன்மை சிறக்கவும் இந்நன்நாளில் என் வாழ்த்துக்களும் ஆசிகளும் வலம்புரியின் வளர்ச்சிக்கு வித்தாக அமையட்டும். வாழ்க தமிழ்! வளர்க வலம்புரியின் தமிழ்த் தொண்டு!!

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் (ஜே.பி), பிரதமகுரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், இந்துமத குரு பீடாதிபதி.**



## தர்மத்தின் குரலாக ஒலிக்கும் வலம்புரி

20.12.2021 இல் இருபத்திரண்டு ஆண்டுகளை நிறைவு செய்து இருபத்து மூன்றாம் ஆண்டில் கால் பதிக்கும் வலம்புரியே வாழ்க பல்லாண்டு. தமிழருக்காக தர்மத்தின் குரலாக உழைக்கும் உன்பணி கண்டு உவகை கொள்கிறது தமிழ் உலகு. வலம்புரியே தர்மத்தின் குரலாய் தமிழுக்காக ஓங்கியொலித்திடுவாய்.

தனித்தன்மையுடன் நடுவுநிலை தவறாது நன்னெறி காக்கும் நாளிதழாய் வலம்புரி- சங்குநாதம் பத்திரிகை இரண்டு தசாப்தங்களை நிறைவு செய்துள்ளது. இருபத்து மூன்றில் மென்மேலும் சிறந்து வாசகர் மனதில் உயர்வு பெற்று வலம்வர வேண்டும்.

அரசியல், விளையாட்டு, சிறுவர் பகுதி, சுகாதாரம், பொழுதுபோக்கு, பசுமை, சமயம் சார்ந்த கட்டுரைகள், சிறுகதை என்றனைத்தையும் உன்னுள்ளே தாங்கி வருகின்றாய். மக்கள் நலன்கருதி குறைகளை எடுத்தியம்பிட வழிசெய்கின்றாய். ஆசிரியர் தலையங்கமாக அறமுரைத்து வருகின்றாய். பத்திரிகைத் தர்மத்தின் வழி தொடர்ந்தும் நின்று மக்களுக்கு நல்வழிகாட்டிடுவாய்.

புகழ்ந்து பேசும் உன் வாசகர்கள் உன்னை வியந்து பேசச் செய்யும் வகையில் வலம்புரிப் பத்திரிகையே! மேலும் நீ தடையின்றி மக்கள் பணி புரிய வேண்டும் என்று வாழ்த்தி குருவருளையும் திருவருளையும் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகின்றோம்.

**ஸ்ரீமத் வேதவித்தியாசாகரர் சுவாமிகள், ஸ்ரீ சிவகுருநாத குருபீடம், வேதாந்தமடம், கந்தர்மடம்.**



## வலம்புரியின் பணி பாராட்டிற்குரியது

"நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்" எனும் மகுட வாசகத்துடன் தமிழ் மக்களுக்கான செய்திகளை தாங்கி காலையில் எமது கரங்களில் தவழும் வலம்புரி நாளிதழ் தனது பயணத்தில் 22 ஆண்டுகளை பூர்த்தி செய்து இன்றுவரை பயணித்துக் கொண்டிருப்பது பரம்பொருளின் திருவருளே!

பொதுவான செய்தித்தாள் என்ற நிலையைத் தாண்டி, சமய, சமூக, கலாசார, கல்வி, அரசியல், இலக்கியம், மருத்துவம் ஆகிய துறைசார்ந்த செய்திகளையும் சிறப்பாக துறைசார் அறிஞர்களின் கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்து கொண்டிருப்பதே வலம்புரியின் சிறப்புத் தன்மையாகும். தமிழ் மக்கள் தமது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு இருக்கும் பொறுப்புக்களையும் செய்திகளினூடாக கூறி அவர்களை ஒன்றிணைக்கின்ற பொறுப்பையும் வலம்புரி நாளிதழ் செய்துவருவது பாராட்டுக்குரியது. வலம்புரி நாளிதழ் தனது பணியை தொடர்ந்து சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு அருள்புரிய இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டு, நாளிதழ் தொடர்ந்து வெளிவருவதற்கு காரணமானவர்கள் அனைவருக்கும் எமது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சிவஸ்ரீ.ச. மகாலிங்கசிவக்குருக்கள், செயலாளர், அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை.**



## துணிச்சலுடன் செயற்படும் நாளிதழ்

வலம்புரி நாளிதழ் தனது 22 ஆவது ஆண்டு அகவையை நிறைவு செய்து அகவை 23 இல் கால் பதிக்கும் இந்த நன்னாளில் எமது ஆசியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெரும கிழ்வடைகிறோம்.

கருத்தாழம் மிக்க ஆசிரிய தலையங்கம் வலம்புரியின் சங்குநாதமாக ஒலிப்பது கண்கூடு. புராண-இதிகாச குட்டிக்கதைகள் சொல்லி விடயத்தினை நாசூக்காக வெளிப்படுத்தி மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் செல்லும் பணியினை வலம்புரி ஆற்றி வருவது மகத்தானது.

இன்றைய நெருக்கடியான அரசியல் சூழலிலும் செய்தி களை நடுவுநிலை தவறாமல் எதிர்விளைவு எப்படியி ருக்கும் எனக் கவலை கொள்ளாமல், தைரியமாக செய்தி களை வெளிக்கொணர்வது வலம்புரியின் வழமை.

தனித்துவமான ஆசிரிய தலையங்கமும் உடனுக்குடன் வெளியாகும் உண்மைச் செய்திகளும் நாளும் பொழுதும் வலம்புரியின் வாசகர் வட்டம் விரிந்து செல்லக் காரணமாகிறது.

தர்மத்தின் குரலாக ஒலிக்கும் வலம்புரி நாளிதழின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்போடு சேவையாற்றும் அனைத்து உள்ளங்களையும் நாம் வாழ்த்துகிறோம். 23 ஆவது ஆண்டில் கால் பதிக்கும் வலம்புரியின் பணி தொடர எமது நல்லாசிகள்.

வலம்புரி வாழ்க! வளர்க!

**குருபணியில் செ.மோகனதாஸ் சுவாமிகள், சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**



**உயர்க நீ வலம்புரி!**

வையகம் வளமுற வழியது
வகுக்கும் வலம்புரி!
மெய்யது மலர்ந்திட மெய்யாய்
உழைக்கும் வலம்புரி!
செய்வதைச் செம்மையாய்ச்
செய்திடும் சிறப்புறு வலம்புரி!
உயர்ந்திட உறுதியாய்
உதவியே உயர்க
நீ வலம்புரி!

**நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்.**

**வாழ்க... வாழ்க...**
**வலம்புரியே வாழ்க...!**

வாசகரின் மனங்கவர்ந்து
வானுயர்ந்த வலம்புரிக்கு
வயது 23 வாழ்த்துக்கள்...!

ஊர் உலக நடப்புக்களை
உடனுக்குடன் உரைக்கின்ற
ஊடக நண்பனுக்கு நல் வாழ்த்துக்கள்..!

பார் எங்குமுள தமிழரெலாம்
போற்றிப் புகழும் வலம்புரிக்கு
பாராட்டி வாழ்த்துக்கள்

ஆண்டி ஆனாலும்
சரி என்றால் சரியென்ற

வலம்புரிக்கு நீதி வாழ்த்துக்கள்...!
அரசனே ஆனாலும்
பிழை என்றால் பிழையென்ற
வலம்புரிக்கு வீர வாழ்த்துக்கள்

தமிழ் நாட்டு, வெளிநாட்டு ஊடகங்கள்
தயங்காமல் மெச்சிநிற்கும்
வலம்புரிக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்...!

வீழ்த்திடத் துடித்தோரை
வாய் பிளந்து பார்க்க வைத்து
வீறுநடை போட்டு வெற்றிக்கொடி ஏற்றிட்ட
வலம்புரிக்கு வெற்றி வாழ்த்துக்கள்!
வாழ்க வளமுடன்

**தம்பியண்ணா**
**மீசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி 22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021



## யாழ்.அரச அதிபரின் வாழ்த்துச்செய்தி

வலம்புரி சங்குநாதம் இதழின் 22ஆவது ஆண்டு அகவையை முன்னிட்டு வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். யாழ். மண்ணில் தனது தடம் பதித்து மக்களின் மனதை வென்ற வலம்புரி நாளிதழ் தர்மத்தின் வழி நின்று உண்மைச் செய்திகளை உடனுக்குடன் மக்களுக்குத் தெரியப்படுத்துவதில் முதன்மையான பத்திரிகை என்றே கூற வேண்டும். சங்குநாதம் தனது பெயருக்கேற்றால் போல் இசை விரும்பிகளுக்கு நாதம் எவ்வளவு இனிப்பானதோ அதேபோல் நாதமாக பல்சுவையினையும் உள்ளடக்கி வெளிவருவது மக்கள் அனைவருக்கும் உவப்பான செய்தி என்றே சொல்லவேண்டும்.

அந்தவகையில், சமூகத்தின் சமகால அரசியல், சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து வெளிக்கொணரும் வகையில் ஆலடி மாநாடு, வியாசர் பதில்கள், மௌனத்தின் தேடல், வலிசொல்லும் தொடர், தொடர் கட்டுரைகள், திரைவிமர்சனம், மருத்துவச்சுடர், அறிவியல் தகவல்கள், சமய சம்பந்தமான கட்டுரைகள், சிறுவர் பகுதி ஆகியவற்றினூடாக அனைத்துத் தரப்பினரும் ஒருவாரத்தில் சுவைத்துப் படிக்கும் அளவிற்கு பல்சுவைக் கதம்பமாக வெளிவரும் சங்குநாதம் அனைவரும் விரும்பும் நாளிதழாக அமைவதுடன், காலக்கண்ணாடியாகத் திகழ்வதும் விதந்துரைக்கத்தக்கது.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையானுழை"

என்னும் வள்ளுவனின் வாக்குக்கமைய,தளராத ஊக்கம் உடையவர்களிடத்தே ஆக்கம் தானே அவரிருக்கும் இடத்திற்கு வழிகேட்டுப் போய்ச்சேரும் என்பதற்கு அமைய, வலம்புரி பத்திரிகை தர்ம வழியில் தனது பணியைத் தொடர்ந்து 22 வருடங்கள் நிறைவேற்றியிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இப்பணிதொடர, வலம்புரி பத்திராதிபர் மற்றும் வலம்புரிக் குழுமத்தினருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், மலரும் சங்குநாதம் சிறப்புற வெளிவரவும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**கணபதிப்பிள்ளை மகேசன்**
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.



## "வடதமிழ் மண்ணின் வளநிலை சாற்றும் வகையினில் சிறந்த வலம்புரி வாழ்க".

ஈழத்தின் வடபுலத்தில் நடுவுநிலைமை வழுவாது நேர்மையையும் துணிச்சலையும் தன்னகத்தே கொண்டு ஊடகத்துறையில் ஆலவிருட்சம் போல் வேரூன்றி மக்களைத் திருப்திப்படுத்தும் எழுத்தியல் சார் சேவைகளை செவ்வனே ஆற்றுவதில் வலம்புரி- சங்குநாதம் நாளிதழ் பெருஞ்சிறப்பைக் கொண்டுள்ளது.

ஒருநாளிதழை ஆரம்பிப்பது பெரிய விடயமல்ல. அது தன் பாதையில் எதிர்கொள்ளும் தடைகளைத் தகர்த்து, சீரான முறையில் செயலாற்றி, அதன் புகழை நிலைத்து நிற்கச்செய்வதே அரிய பெரிய விடயமாகும்.

அந்தவகையில் பல இக்கட்டான சூழ்நிலைகளிலும், ஆரம்பித்த காலத்திலிருந்து இருபத்திரண்டு ஆண்டுகள், மக்களின் மனதைவென்று சேவையாற்றி, அகவை இருபத்து மூன்றில் ஆழ அகலக் கால்பதித்து, தொடர்ந்து முழங்கும் சங்காக வலம்புரி திகழ்வது மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமே.

தமிழ் பேசும் மக்களின் இதயக்குரலாக, உண்மையின் உரை கல்லாக, சுடர்விட்டொளிரும் ஞாயிறாக, பட்டிதொட்டியெங்கும் ஒலிக்கும் சங்குநாதமாக சிங்க நடைபோடும் வலம்புரியே! எம் மக்களின் நலன்காக்க, துணிந்து நின்றுபோராடும் பத்திரிகையாளர்களை உன் இதயத்தில் தாங்கி, இன்னும் இன்னும் பல்லாண்டு காலங்கள் உன் ஊடக சேவையை உளமார உலகெங்கும் உலவச் செய்ய இறையாசி வேண்டி, என் இதய பூர்வமான வாழ்த்துக்களை என்றென்றும் வழங்கி மகிழ்கிறேன்.

**நடராசா இராசவிசாகன்,**
பதிவாளர்,
பல்கலைக்கழகம், வவுனியா.



## கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தவல்ல வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம்

யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் பல நாளிதழ்கள் வெளிவருகின்றன. ஒவ்வொரு நாளிதழும் தமக்குரிய தனித்துவத்துடன் செய்திகளைப் பிரசுரிக்கின்றன. சமய, கலை, கலாசார விழுமியங்களைப் பேணும் விதத்தில் செய்திகளை, ஆக்கங்களைப் பிரசுரித்து இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களை ஆற்றுப்படுத்துவதில் வலம்புரி நாளிதழ் தனித்துவமான இடத்தை வகிக்கின்றது.

பத்திரிகை ஒன்றின் பிரதான செய்தி - தலையங்கம், ஆசிரியத் தலையங்கம், வாசகர்களது ஆசிரியருக்கான கடிதங்கள், சிறப்புக் கட்டுரைகள், வாசகர்களால் விரும்பப்படும் பத்தி எழுத்து என்று வகைப்படுத்திப் பார்க்கையில்; வலம்புரி பத்திரிகையின் தினசரி ஆசிரியத் தலையங்கம் காத்திரமானதாகவும் வாசகர்களால் அதிகம் விரும்பிப் படிக்கப்படும் பத்தியாகவும் காணப்படுவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

வலம்புரியின் ஆசிரியத் தலையங்கம் சமூகத்தில் ஆரோக்கியமான மாற்றத்தை, கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்து வருகின்றமை நோக்கற்பாலது.

வலம்புரி நாளிதழ் இப்பிராந்தியத்தின் வரலாற்றையும் தொன்மையையும் மறந்துபோன தமிழர்களது அறிவியலின் பல்வேறு துறைகளையும் கட்டுரைத் தொடர்களாகத் தொடர்ச்சியாக வெளிக்கொண்டு வருவது பாராட்டத்தக்கது.

இன்றைய தினம் 23 ஆவது அகவையில் கால் பதிக்கும் வலம்புரி நாளிதழ் மென்மேலும் சிறந்த முறையில் புதுமைகளைப் படைத்து பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவதில் உளம் மகிழ்கின்றேன்.

**வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி,**
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.



## நடுவுநிலை தவறாது தமிழ்த் தேசியத்திற்கு தன்னை அர்ப்பணித்த நாளிதழ்

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் நாளிதழாக தமிழ்மக்களின் மனங்களில் இடம்பிடித்துள்ள நாளிதழாம் வலம்புரிக்கு மாநகர முதல்வர் என்ற வகையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஊடகங்கள் செய்தியினை உண்மைத்தன்மையோடு மக்களுக்கு கொண்டு சென்று சேர்ப்பதில் பெரும்பங்காற்றுகின்றன. அந்தவகையில், வலம்புரியும் தனது சிறந்த பங்கினை ஆற்றி வருவதுடன் தனியே செய்திகள், தகவல்கள் என நின்றுவிடாது. மேலும் வாசகர்களைக் கவரும் நோக்கோடு விசேட அம்சங்கள் சிலவற்றையும் உள்ளடக்கி வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்க ஒரு விடயம்.

வாசகர்களால் ஒரு பத்திரிகையில் முதலில் ஆர்வத்துடன் நோக்கப்படுவது அதன் தலைப்புச் செய்தியேயாகும். ஆனால், வலம்புரிப் பத்திரிகையில் காலத்தின் தேவை கருதி சிறந்த சொல்லாடலுடனும், ஆழ்ந்த கருத்துக்களுடனும் வெளிவரும் ஆசிரியர் தலையங்கமே முதலில் தேடப்படுகின்றமை வலம்புரிக்கே உரித்தான தனித்துவம். தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசிய சிந்தனையை வளர்ப்பதிலும், அதனைக் காப்பதிலும் அன்று தொடக்கம் வலம்புரி காத்திரமான பங்காற்றி வருகின்றது.

இன்று தனது 22 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடிக்கொண்டு இருக்கும் வலம்புரிப் பத்திரிகையின் பணி மேலும் தொடர்ந்து ஆக்கபூர்வமான பல அம்சங்களையும் தன்னகத்தே கொண்டு, தமிழையும் வாழவைப்பதோடு, மக்கள் மனங்களிலும் தொடர்ந்து இடம்பிடித்து சிறந்த பத்திரிகையாக எதிர்காலத்தில் மிளிர வேண்டும் என எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## வலம்புரி தனித்துவமான நாளிதழ்

பத்திரிகை தர்மத்தின் வழி நின்று வெளிவரும் வலம்புரியின் 22ஆவது அகவை நிறைவையொட்டி பிரசுரமாகும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடை கின்றேன்.

ஊடகத்துறையில் கடும் போட்டி நிலவும் யாழ்ப்பாணத்தில் இப்பத்திரிகையின் நிலைபேறு தன்மையும் வெற்றியும் மிகவும் பாராட்டிற்குரியன. இன்று இப்பத்திரிகை தனக்கேயுரிய தனித்துவமான பாணியிலும் பண்பிலும் இலக்குகளை நோக்கிச் செயற்பட்டு வருகிறது. மேலும் இப்பத்திரிகை தென்னாசியப் பண்பாட்டு மணம்கமழ பல சிறப்பான ஆக்கங்களைத் தாங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வலம்புரி தமிழ்மக்களை ஒன்றிணைப்பதிலும் அவர்கள் நலன் காப்பதிலும் மக்களின் பல்துறை அறிவை வளர்ப்பதிலும் பொது நலன்களைப் பாதுகாப்பதிலும் எமது சமூக, சமுதாயப் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதிலும் மற்றும் பல்துறைத் தகவல்களை வழங்குவதிலும் காத்திரமான பங்களிப்பை அளிக்கிறது.

மேலும் ஜனநாயகத்தை பாதுகாப்பதிலும் எல்லா மட்டங்களிலும் நல்லாட்சியை வலியுறுத்துவதிலும் வாழ்வியல் விழுமியங்களையும் ஆன்மிக நெறி முறைகளையும் முன்னெடுப்பதிலும் வலுவான பணியை மேற்கொண்டு வருகிறது.

வலம்புரியின் ஆசிரிய தலையங்கம் காலத்திற்கு ஏற்றவகையில் வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பத்திரிகையின் வளர்ச்சிக்கும் வாசகர் வட்ட விரிவுக்கும் ஆசிரியர் தலையங்கம் முக்கிய காரணமாகும்.

சிறப்பான ஊடகப் பணியாற்றி வரும் வலம்புரி மென்மேலும் வளர்ச்சிகாண என் வாழ்த்துக்கள்

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,**
முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.



## வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

பத்திரிகை சேவை என்பது ஒவ்வொரு நாட்டிலும் அந்த நாட்டின் அனைத்து விடயங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற ஒரு பாரிய பொறுப்பினை தன்னகத்தே கொண்ட சேவையாகும். அந்தவகையில் 22 ஆண்டுகளாக மக்களுக்கான சேவையை ஆற்றிவருகின்ற "வலம்புரி- சங்குநாதம்" பத்திரிகை இன்று 20 ஆம் திகதியுடன் 23 ஆவது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைப்பதை நினைத்து நாமும் பெருமை கொள்கின்றோம்.

வலம்புரி பத்திரிகையின் ஊடாக, எமது நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் நடைபெறுகின்ற பல்வேறு விடயங்களை எம்மால் அறிந்து கொள்ள உதவியாக அமைகின்றது. அதுமட்டுமன்றி சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் வாசித்துப் பயன்பெறும் வகையில் வலம்புரி அமைந்துள்ளது.

ஒரு நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் பயன்தரும் சேவையை வழங்குவதே ஒவ்வொரு பத்திரிகையும் கொண்டுள்ள முக்கிய நோக்கமாகும். அந்த நோக்கத்தினை நிறைவேற்ற முனைகின்ற வேளையில் வருகின்ற தடைகளைத் தகர்த்தெறிந்து மக்களுக்கு உண்மையான முறையில் சேவையாற்றவும் தொடர்ந்து உங்களது சேவை இடைவிடாது தொடரவும் இன்னும் பல படிகளைத் தாண்டி முன்னேறிச் செல்லவும் எனது மனமார்ந்த வாழ்த்துக் களைத் தெரிவிக்கின்றேன்.

**கலாநிதி. த.மங்களேஸ்வரன்,**
துணைவேந்தர்,
வவுனியா பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி 22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021



## நடுவுநிலை தவறாத வலம்புரி நாளிதழ்


சொற்களின் தொகையையும் நடையையும் உணர்ந்து, மக்களின் சுவைக்கு ஏற்ப அவற்றைத் தகவமைத்து, செய்தியோடு இணைத்துத் தருவது ஊடகத்துறையின் அடிப்படைப்பண்பு.

"இடை தெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடை தெரிந்த நன்மை யவர்"

என்று திருவள்ளுவரும் அந்தப் பண்பையே வலியுறுத்துகிறார். சொல்லும் பொருளும் மிகையின்றி இணைந்த இயல்பான மொழியில் வெளிவரும் "வலம்புரி" நாளிதழ் 23 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைப்பது என்பது மகிழ்ச்சி தரும் செய்தி. அரசியல், அறிவியல், ஆன்மிகம் என்ற மூன்றையும் சரியான விகிதத்தில் கலந்து, நடுவுநிலை தவறாமல் மக்களுக்கு வழங்கி வரும் 'வலம்புரி' நாளிதழ் வலம்புரி முத்தாய்ப் பல்லாண்டு காலம் ஒளிர வாழ்த்துகிறேன்.

என்றும் அன்புடன்,
**ராகேஷ் நடராஜ்,**
**இந்தியத் துணைத்தூதுவர்,**
**யாழ்ப்பாணம்.**

22 அகவையை நிறைவு செய்து
23 ஆவது அகவையில் காலடி
எடுத்து வைக்கும் வலம்புரியே
இன்னும் பல்லாண்டு நீ வாழி!
வாழி! வாழியவே!






## ஊடகத் தர்மநெறியில் பயணிக்கின்ற வலம்புரி

இலங்கையின் வடக்கிலிருந்து கடமை தவறாத ஆதவன் போல் இடையறாது தினமும் வலம் வரும் வலம்புரி நாளிதழ் மற்றும் வாராந்தம் வலம்வரும் சங்குநாதம் இவற்றின் மக்கள் சேவையில், இன்று 22 ஆண்டு காலத்தை இனிதே நிறைவேற்றுவதை இட்டு தீவிரவாசகன் என்ற வகையில் மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

ஊடகப்பணி என்பது எல்லோர் பார்வையிலும் சாதாரணமானதாகத் தெரிந்தாலும் உண்மையிலேயே அது கரடுமுரடு நிறைந்த ஒன்றாகவும் பல்வேறு கசப்புக்கள், சொல்லொண்ணாத இடர்கள், துன்பங்கள், நெருப்பாறுகள் எனப் பலவற்றையும் எதிர்கொண்டு கடந்து செல்லவேண்டிய ஒரு பயணமாகும் என்பதுதான் உண்மை.

ஊடக சுதந்திரத்துடன் ஊடக தர்ம நெறி முறைக்கு அமைவாக உடனடித் தன்மையோடு நேர்த்தியான பாதையில் பயணிக்கின்ற பத்திரிகைகளின் வரிசையில் வலம்புரிக்குத் தனியான இடம் உண்டு என்றால் அதுமிகையல்ல.

மறைமுகமாகவும் நேரிடையாகவும் பல்வேறு எதிர்ப்புகளிற்கும் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் முகம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். இல்லையெனில் தொடர்ந்து பயணிப்பது என்பது கடினமானதே.

இத்தகைய சூழலில் தனது பணிமூலம் சாதனை புரியும் செய்திச் சேகரிப்பாளர்கள், செய்தித் தொகுப்பாளர்கள், விநியோகத்தர்கள், ஒப்புநோக்குநர்கள் மற்றும் பத்திராதிபர் இவற்றிற்கு மேலாக, நிறுவனத்தினர் உட்பட்ட வலம்புரிக் குடும்பத்தினர் அனைவருக்கும் உங்கள் தியாகம் நிறைந்த பணி மென்மேலும் சிறக்கவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மனநிறைவடைகிறேன்.

**க.விமலநாதன்,**
**மாவட்ட செயலாளர்,**
**மாவட்ட செயலகம்,**
**முல்லைத்தீவு.**



## வாசகர்களைக் கவர்ந்திழுக்கும் பத்திரிகை

இன்று 22 ஆவது அகவை காணும் மக்கள் மனம் நிறைந்த நாளிதழ் வலம்புரியை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளராக வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன்.

இன்று நேற்றல்ல, நீண்ட நெடுங்காலமாக "வலம்புரியை" இரசிக்கின்றேன். பாமர மக்கள் முதல் பேரறிஞர்கள் வரையான வாசகர்களைக் கவர்ந்திழுக்கும் பத்திரிகைகளில் ஒன்றாக வலம்புரி வலம்வருகின்றது.

நாட்டின் நிலவரங்களை துல்லியமாக நாளாந்தம் எடுத்தியம்பும் பத்திரிகையாக விளங்குவதுடன் கொவிட்-19 காலத்தில் பாடசாலைச் சிறார்களின் கல்விப் பணியிலும் அளப்பரிய சேவையாற்றுவதுடன் ஆசிரியர் தலைப்பில் காத்திரமான தகவல்களை வழங்கி வருவதும் சிறப்பம்சங்களாகும்.

இன்றைய சூழ்நிலையில் பல்கிப் பெருகிவரும் பலதரப்பட்ட செய்தி ஊடகங்களிடையே தனித்துவமாய் தன்னை நிறுத்தி இனத்துவ உணர்வுடன் வலம்புரி வெளிவருவது எமக்கு இதம் தருகிறது.

இன்று போல் என்றும்- என்றென்றும் நன்னெறி தவறாமல், ஊடக அறம் சார்ந்து அதனைக் காத்து வலம்புரி மென்மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

வலம்புரி நிர்வாக இயக்குநர், ஆசிரியர், செய்தியாளர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட அனைவரும் இப்பணி நின்று சிறக்க இறையருள் கிட்டட்டும்.

**வி.காண்டீபன்,**
**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## வலம்புரியின் வருகையால் வந்ததே மாற்றம்



22 ஆண்டுகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து தனது 23 ஆவது அகவையில் காலடிவைத்து 'வலம்புரி' பத்திரிகை இன்று வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. மிகத் தெளிவான அச்சுப் பிரதியாக வெளிவந்து கொண்டிருப்பது வலம்புரியின் தனிச்சிறப்பு. நடுவுநிலை தவறாது நன்னெறி காத்து செய்தி தருதல் இப் பத்திரிகைக்கே உரிய தனித்துவம். வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் சமூக சீர்திருத்தத்தை, சமூக ஒழுங்கை, மனித ஒழுக்கத்தை நிலை நாட்டுவதற்காக வரையப்படுகின்றமை அனைவராலும் பாராட்டப்படுகின்றது. இதன்மூலம் எத்தனையோ நல்ல மாற்றங்கள் சமூகத்தில் ஏற்பட்ட வண்ணமுள்ளன.

ஆசிரியர் தலைப்புக்கு மேற்புறத்தில் தினமும் பிரசுரமாகும் 'அறிஞர் மொழி' அற்புதமான சிந்தனைகளைத் தூண்டுகின்றது. உள்நாட்டுச் செய்திகளோடு பாரதச் செய்தி, வெளிநாட்டுச் செய்திகள், இராசிபலன், இன்று ஒரு தகவல் (தென்கச்சி கோ.சுவாமிநாதன்), வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை, சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள், பேராசிரியர் கு.மிகுந்தன் எழுதும் இனியொரு பசுமைப் புரட்சிக்கு போன்ற விடயங்கள் அனைத்துத் தர வாசகர்களுக்கும் தீனி போடுவனவாக அமைகின்றன.

வலம்புரியின் வார இறுதி வெளியீடான 'சங்குநாதம்' , அரசியல், அறிவியல். ஆன்மிகம் என்ற மகுடத்தோடு குடும்பத்திலுள்ள அனைவரையும் திருப்திப்படுத்தும் விதமாக வெளிவருகின்றது. ஆலடி மாநாடு, வியாசர் பதில்கள், சிறுவர் அரங்கம், மௌனத்தின் தேடல், ஞாயிறு இயேசு நாதரின் திருவாக்கியங்கள், சினிமா, விளையாட்டுச் செய்திகள், சுகமான விடியல் (வலம்புரியின் மருத்துவச் சுடர்) போன்றன மூலம் உலகையே உள்ளங்கையில் கொண்டு வந்து சேர்க்கும் உன்னதமான படைப்புகளை சங்குநாதம் தந்து நிற்கின்றது.

இவ்வாறான பல்சுவைச் சிறப்பு வாய்ந்த அச்சு ஊடகமான வலம்புரி-சங்குநாதம் மனித உரிமையை நிலைநாட்டவும், சமூகச் சீரழிவுகளைத் தடுத்து நிறுத்தவும், சமூக விரோதச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், நீதியான அரசியலை நிலைநிறுத்தவும் வேற்றுமை இல்லாத சமூக அமைப்பை உருவாக்கவும் நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் தொடர்ந்தும் தனது பேனாமுனையை பயன்படுத்த வேண்டும். பத்திரிகா தர்மத்துடன் தான் கொண்ட கொள்கையில் முன்னேறிச் சென்று வரும் தடைகளைத் தாண்டி வெற்றிபெற வேண்டும் என்று வலம்புரிக் குடும்பத்தை வாழ்த்தி அமைகின்றேன்.

**எம்.ஷாந்தன் சத்தியமூர்த்தி**
M.A, M.Ed
**ஆசிரியர் "சாந்தீபம்"**
**அகில இலங்கை சாந்தி சேவா சங்கம்.**

## இருபத் திரண்டாண்டு சேவையினால் நிறைந்த பெருமையொடு இன்னும் வளர்ந்திடுக...!!

சீரிய செந்தமிழைச் சேர்த்திழைத்தே அழகாய்
சூரியனின் ஒளியாகப் பரந்தெங்கும்
நேரிய செய்திகளை ஊரெங்கும் சாற்றும்
நேர்மையுள பத்திரிகை நீதான்!

போரிடவும் துணிந்தே பொய்மையை எதிர்த்துப்
பொருந்திய உண்மைகளை உரைத்தும்
பாரிடத்தே மக்களது அறிவுக்கண் திறக்கும்
பகுத்தறிவுத் தோட்டமும் நீயானாய்!

தினமும் வாங்குகின்ற தினசரிக்குக் காத்திருக்கும்
மனங்களிலே நிற்பதுவும் வலம்புரியாய்
விநயமாய் வீடெல்லாம் விரும்புகிற ஏடாகி
கனமான மதிப்பெங்கே உருவாகி
உனதுபணி உத்தமமாய் வளர்ந்திடவே உயர்ந்து
வளப்போடு இருபத்து இரண்டாண்டு
தினையளவும் மாசிலாச் சேவையினைப் புரிந்த
இனமான "வலம்புரியே" வாழிவாழி!!

வாராந்த பதிப்பினை வாங்கிப் பிரிக்கையிலே
வகையான அறிவுக் களஞ்சியமாய்
ஏராள மாகவே பல்சுவை விடயங்கள்
எங்குமே சிறந்து பொலிந்தே
தீராத ஆசைதனை ஊட்டியே வாசகர்கள்
திகட்டாது படித்திடவே மலரும்
தாராள இதழுடைய தக்க 'வலம்புரியே'
தளராமல் நூறாண்டு வாழியவே!!

**நீர்வை இரா. தில்லைராஜன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி

# 22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி

# 22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி

# 22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரி
# 22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021


## த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்

TS

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

பட்டுப் புடைவைகள், சாறி வகைகள் மற்றும் அனைத்து விதமான ஆடைத் தெரிவுகளுக்கும் நாட வேண்டிய ஒரே இடம்

21, நவீன சந்தை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
021 222 9965

225C, மின்சார நிலைய வீதி, (வைத்தியசாலை பின்புறம்) யாழ்ப்பாணம்.
021 221 5397



(C-3290)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

Ruby Jewellery




## ரூபி ஜுவல்லறி

சிங்கப்பூர் தரத்திலான தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்



எம்மிடம் கடன் அட்டைகள் மூலம் கொள்வனவு செய்யும் வசதியும் உண்டு.

இல.227-229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 6919, 077 734 4074, 077 739 6176

(C-3295)



## லலிதா ரெக்ஸ்

## Lalitha Tex

இல.5,6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
021 222 5260

- பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சல்வார் வகைகள். றொப், லெக்ஜீன்ஸ், பஞ்சாபி வகைகள்.
- Paty Frocks வகைகள்.
- ஆண்களுக்கான ஜீன்ஸ், சேட், ரீசேட், குர்தா வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்ய நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கைக்குரிய கைராசியான ஒரே ஸ்தாபனம்.



(C-3302)

## ஸ்ரீ லலிதா பெஷன்

## Sri Lalitha Fashion

இல.165, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
021 222 4003



வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

## வாணி ரெக்ஸ்



Wedding Sarees & Salwar New Collection, New Style

திருமணப் பட்டுப்புடைவைகளின் ஆலயம்

- திருமணப் பட்டுச் சாறி வகைகள்
- பூப்புனித நீராட்டு விழா சாறி வகைகள்
- பிறந்த நாள் விழாக்களுக்கான பாட்டி புறொக் மற்றும் மொடன் புறொக் வகைகள்
- அரச, தனியார் நிறுவன ஊழியர்களுக்கான ஒரே நிறத்திலான சாறி வகைகள்
- இந்தியாவில் இருந்து உடனுக்குடன் வெளிவந்த ஒன்லைன் சாறி வகைகள்
- புதிய வகை சல்வார், லெகங்கா, மஸ்தானி ஆடைவகைகள்
- ஆண்களுக்கான அனைத்துவகை ஆடைகளையும் மலிவு விலையில் பெற்றிடலாம்.



021 222 5578,
021 222 9286

இல.81, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

(C-3301)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

TKT Mark நல்லெண்ணெய் No.1

4 ஆவது தலைமுறையாக இன்றும் அதே தரத்துடன் பாரம்பரிய பழைய முறையில்
மரச்செக்கிலிருந்து ஊற்றியெடுக்கப்படும் நல்லெண்ணெய்

(C-3291)

It's an Authentic Sesame Oil and The Best One in Our Products

மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்...
தயாரிப்பாளரும் ஏக விநியோகத்தரும்



தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
நவாலி வீதி, மூத்த நயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

T.P: 0778328828, 0776528633, 0212255718



MATHI COLOURS

Laser Cutter Engraver

சிறந்த முறையில் நீங்கள் விரும்பிய
வடிவமைப்பில் அனைத்து விதமான

அழைப்பிதழ்களையும்
பரிசுபொருட்கள் மற்றும்
நினைவுச்சின்னங்களையும்

எம்மிடம் மிகக் குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ளலாம்...



இல. 10, முருகேசர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

CUSTOMER CARE +94 77 722 2259 (C-3297)

## பல்லாண்டு காலம் வலம்புரி நீ வாழ வேண்டும்

சிறுவர்களுக்கு சிறுவர் அரங்கம்
நலமாக வாழ மருத்துவம்
பாடல்களுக்கு சங்கு நாதம்
நாட்டு நடப்புக்களுக்கு ஆலடி
அனைத்திற்கும் மகுடமாய்
நாளாந்த ஆசிரியர் தலையங்கம்
அனைத்தையும் தாங்கும் நீ
வலம்புரி சங்கின் ஓசையாய்
ஒவ்வொரு நாளும்
உன் வரவை பார்த்திருக்கும்
பல்லாயிரக்கணக்கான வாசகருள்
நானும் ஒருவன் வாழ்க வலம்புரி

**ஷெர்லின் ஜெறின்**

உங்கள் வீட்டின் சுபகாரியங்களை அலங்கரிக்க

சித்தா றெஜிபோம் டிசைன்ஸ்




இலக்கம் 49 A
அச்சுக்கூட வீதி,
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.

(இ)

Phone:
075 039 4357, 075 5445901

## 22 வது அகவையில் மலர்ந்திடும் வலம்புரி நாளிதழுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்

கோடிச் சங்கில் ஒரு சங்காம்
வலம்புரி நாதன் வந்த நாளில்
கூடிக் களித்து கும்பிட்டு - உனை
பாடிக் கவிதை ஒன்றை
படைக்கின்றேன் இந் நன்நாளில்

உன் இதழை படித்தவரும் நின்றுபார்ப்பார்
பணம் படைத்தவரும் சென்று பார்ப்பார்.
திரை ஆசை வந்தாலும் - உன்
குமிழ் முனையால் ஆலடியில் தமிழாசை மாளப் பெரிது....

நம் தேசத்தின் குறைபடு இடங்களை இனம் கண்டு
உன் குமிழ் முனையால்
நிரல் இலையாக்கி நீக்கியவன் - நீ...

ஆசிரியத்துவத்தின் மகத்துவத்தை
அதிக மக்களுக்கு நெஞ்சில்
பதிய வைத்தவன் - நீ
நாளாந்த பேசு பொருளை
நறுக்கென்று எடுத்துரைத்து
நாலாத் திசையிலும்
தர்மமாய் சொன்ன நீ
நீடுழி வாழ்க

*சித்தா றெஜிபோம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி
22 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2021

# வாசகர் மனங்களில் வலம்புரி...



தொகுப்பு:
ஜெயம் ஜெகன்

### தமிழ்ப் பத்திரிகை வரலாற்றில் வலம்புரிப் பத்திரிகை தனித்துவமான அடையாளத்துடன் விளங்குகிறது

"தன் நெஞ்சறிவது பொய்யற்க" என்ற ஆசிரியர் தலையங்கத்துடன் வலம்புரிப்பு பத்திரிகை 1999 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20 ஆம் திகதி யாழ்.வண்ணார்பண்ணையில் உதயமாகியது. 22 வருடங்களாகத் தமிழ் மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. அறிவித்தல், அறிவுறுத்தல், விளக்குதல், மகிழ்வித்தல், வாணிபம் செய்தல் ஆகிய பத்திரிகைப் பணிகளைச் சிறப்புற ஆற்றி வருகின்றது. ஒரு பத்திரிகைக்கு இருக்கக்கூடிய அத்தனை அம்சங்களையும் உள்ளடக்கி "நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்" என்ற மகுடவாசகத்துடன் பெரும் பேச்சாளர் ந.விஜயசுந்தரம் அவர்களைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு தினந்தோறும் வெளி வருகிறது.

வலம்புரிப் பத்திரிகையை ஆசிரியத் தலையங்கத்தைப் படிப்பதற்கென்ற ஒரு பகுதி வாசகர்கள் வாங்குகிறார்கள். ஆசிரியர் தலையங்கம் எல்லா நிலையினராலும் விரும்பிப் படிக்கின்ற ஆசிரியத் தலையங்கமாகவுள்ளது. ஒருமுறை கடிதமாகவும் இன்னொரு முறை தாளலயமாகவும் வேறொரு முறை அன்பு மடலாகவும் பிறிதொரு முறை கனவு காண்பது போலும் கவிதை வடிவிலும் எனப் பல எழுத்து நடைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் உலகத்தரம் வாய்ந்தவை என யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை புகழாரம் சூட்டியுள்ளார்.

இம்மாநாடு ஆலடிப் பிள்ளையார் கோவிலடியில் நடைபெறுகிறது. மாநாடோ ஆலப்பிள்ளையார் கோயிலின் கண்டாமணியும் ஒலிக்க நிறைவுகிறது. ஆன்மிகத்தில் ஆரம்பமாகி ஆன்மிகத்தில் நிறைவுறுதை இப்பத்திரிகையெழுத்தில் காணலாம். வாத்தியார், பண்டிதர், விதானையார், கங்காணி, மூப்பர், சாத்திரியார் ஆகிய ஆறு பாத்திரங்களினூடாக சமகாலத்தரின் பிரச்சினைகள் பேசப்படுகின்றன. அப்பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளும் முன்வைக்கப்படுகின்றன. இந்த ஆலடி மாநாட்டினைப் பலரும் விரும்பிப் படிக்கின்ற பகுதியாகவுள்ளது.

மாவை.கஜேந்திரன் அவர்களினால் எழுதப்படுகின்ற வியாசர் பதில்கள் அதிகளவில் விரும்பிப் படிக்கின்ற பக்கங்களாகவுள்ளன. வியாசர் பதில்கள் ஊடாக சுவையான யதார்த்தமான சிந்தனைகள் முன்வைக்கப்படுகின்றது. வாசகர்களின் கேள்விகளுக்குப் பொருத்தமான தகுந்த விடையளிக்கப்படுகிறது. இப்பகுதியும் பயனுறும் குறிப்பாக இளைஞர், யுவதிகளால் விரும்பிப் படிக்கின்ற ஒரு பகுதியாகவுள்ளது.

பேஸ்புக் பார்த்தில் பிடித்தவை ஊடாகப் பலதரப்பட்ட விடயதானங்கள் எடுத்துச் சொல்லப்படுகின்றன. இப்பக்கத்தைச் சிறுவர்கள் முதல் முதியவர்வரை விரும்பி வாசிக்கின்றதனைக் காண முடிகின்றது.

விதுரன், அபிமன்யு பெயர்தாங்கி வரும் கட்டுரைகள் விறுவிறுப்பான ஒரு தொடராகவுள்ளது. மரக்கறி சந்தை நிலவரம், இன்றைய நாளில் முன்னைய பதிவுகள், இலங்கைத்தமிழர் வரலாறு, காலத்தால் அழியாத கானங்கள், ஈழத்துச்சினிமா, சிறுவர் அரங்கம், இன்று ஒரு தகவல் போன்ற பல்துறை அம்சங்களைத் தாங்கி வருகின்றது. வலம்புரிப் பத்திரிகை தனது பணியில் உறுதியானதாகவும் நடுவுநிலையானதாகவும் உள்ளது. போர்க்காலச் சூழலிலும் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் தன் பணியிலிருந்து பின்வாங்காது தினசரி வெளிவந்தது. அற்புதமான பணியினை செய்து வரும் வலம்புரிப் பத்திரிகை இன்று தனது 23 ஆவது அகவையில் கால்பதிக்கும் இவ்வேளையில் வலம்புரி பற்றி பல்வேறுபட்ட வாசகர்களிடம் கேட்ட போது அவர்கள் குறிப்பிட்டவை.



**மு.குகதாசன்**
**(தலைவர் - வற்றாப்பளை கண்ணகி ஆலயம்)**
**வயது- 79**

"வலம்புரிப் பத்திரிகை தமிழர்களின் பண்பாடு, ஆன்மிகம் கலையோடு கூடவே பயணிக்கின்ற ஒரு பத்திரிகை. வலம்புரியின் செய்திகள் பக்கச்சார்பின்றி எழுதப்படுகின்றன.

சமூகத்திற்குச் சொல்ல வேண்டிய விடயங்களைத் தக்க நேரத்தில் சொல்லுகின்றது. ஒரு சமூகத்திற்கும் இன்னொரு சமூகத்திற்கும் பிரச்சினைகளைத் தூண்டி விடுகின்ற விதமாக ஒருபோதும் செய்திகளை வெளியிடுவதில்லை.

வலம்புரிப் பத்திரிகையின் மிகச்சிறப்பு அதன் ஆசிரியத்தலையங்கம். ஆசிரியர் தலையங்கத்தின் மூலம் பலவிதமான அபிவிருத்திப் பணிகள் நடைபெற்றன. குறித்த திணைக்களங்கள் இந்த ஆசிரியத் தலையங்கத்தில் சொல்லப்பட்ட விடயங்களைக் கவனத்தில் எடுத்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துள்ளன.

எமது சமூகம் அறவழியில், ஆன்மிக வழியில் சென்றால் நல்ல சமூகத்தை காணமுடியும் என்ற சிந்தனை வலம்புரிப் பத்திரிகைக்கு உண்டு. அதனால்தான் ஆன்மிகம் சார்ந்த விடயங்களை மேலோங்கச் சொல்லுகின்றது. செய்திகளில் உண்மைத்தன்மை காணப்படுகின்றது. செய்திகளில் செய்திக் கட்டமைப்பும் பேணப்படுகின்றன. அளப்பரிய பணியினை வலம்புரிப் பத்திரிகை மேற்கொண்டு வருகின்றது.



**சி.அகிலத்திருநாயகி**
**முன்னாள் சிறைச்சாலை பொறுப்பதிகாரி-**
**வவுனியா, வயது -70**

"வலம்புரிப் பத்திரிகை படிப்பதே எனது முதல் வேலை. பத்திரிகையில் உள்ள புதினங்களை முதலில் படித்து ஒவ்வொரு செய்திகளையும் ஒவ்வொரு கட்டுரைகளையும் ஆராய்ந்து பார்ப்பேன்.

எங்கள் சமூகத்திற்கு அவசியமான விடயங்கள் பேசப்படுகின்றன. அதிலும் குறிப்பாக சிறுவர்கள், இளைஞர்கள் இவர்களுக்கு வேண்டிய விடயங்கள் சொல்லப்படுகின்றன.

கல்வி, ஆன்மிகம், கலை, பண்பாடு, மரபு ஆகிய விடயங்கள் தொடர்ச்சியாக வெளிவருகின்றன. பத்திரிகையில் வருகின்ற எனக்குத் தேவையான விடயங்களை நகல்செய்து வைத்திருப்பேன்.

அவற்றினைத் தேவையான பொருட்டு மற்றவருக்குக் காண்பித்து உரையாடுவேன். வலம்புரிப் பத்திரிகையின் வரலாற்றில் பல சவால்களைத் தாண்டி இன்று எம்மத்தியில் சாதனைகளைப் படைத்து வெளிவருகின்றது. விளையாட்டுச் செய்திகளுக்கும் களமைத்து விளையாட்டுடன் தொடர்புடையவர்களையும் தன் பக்கம் ஈர்த்துள்ளது. பல புதினங்களை அறியக்கூடிய ஒரு புதினப் பத்திரி கையாக உள்ளது. வலம்புரி தாங்கி வருகின்ற அத்தனை விடயங்களும் எமக்கு மிகவும் வேண்டிய அறியக்கூடிய விடயங்களாகத்தான் உள்ளன.



**ச.சுந்தரலிங்கம்**
**வயது - 67**
**முள்ளியவளை**

"நான் தினமும் வலம்புரிப் பத்திரிகை வாங்கிப் படிப்பவன். எனது குடும்பமே வலம்புரியை ஆர்வத்துடன் படிப்பார்கள். பல்சுவை அம்சங்களோடு வலம்புரி நாளிதழ் வெளி வருகின்றது. மாணவர் சமுதாயத்திற்காக சிறுவர் அரங்கம், கல்வித்தரிசனம் ஊடாகக் கல்வியறிவு, பண்பாடுகள் வழங்கப்படுகின்றன.

மக்களின் வாழ்வியலோடு மிகவும் நெருக்கமான பத்திரிகையாக வலம்புரி உள்ளது. பத்திரிகைக்குரிய தர்மத்தைச் சிறப்பான முறையில் பின்பற்றுகின்றது. ஞாயிற்றுக்கிழமை பத்திரிகை சங்குநாதத்தையும் இணைத்துக் கொண்டு நிறப் பக்கத்தில் வெளிவருகின்றது. குறிப்பாக ஆலடி மாநாடு, வியாசர் பதில்கள், சித்திரிப்பு எழுத்துக்கள் மிகவும் முக்கியமான பகுதிகளாக உள்ளன. நான் வலம்புரிப் பத்திரிகையை வாசித்து முடித்த பின்னர் தான் அடுத்த வேலைகளை முன்னெடுப்பேன். வாசித்து முடித்த பின்னர் நிறைய விடயங்களை அறிந்து கொண்டேன் என்ற உணர்வு ஏற்படும். இவ்வாறு தினந்தோறும் படிப்பதன் மூலம் எம்மை நாம் வளர்த்துக் கொள்ள முடியும். முதலாம் பக்கம் முதல் முடிவுப் பக்கம் வரை முழுமையாக வாசித்து விளங்கிக் கொள்வேன். யாவரும் வாசிக்கக்கூடிய அளவிற்கு அதன் எழுத்தளவு உள்ளது இன்னும் சிறப்பு. எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியத் தலையங்கம் மிகவும் சிறப்பான ஒரு பகுதி. வலம்புரிப் பத்திரிகையின் பணி தொடர்ந்து கிடைக்கட்டும்.



**செ.ரவீந்திரராசா**
**ஓய்வுநிலை அதிபர் -**
**இரணைப்பாலை**
**வயது - 60**

"வலம்புரிப் பத்திரிகை ஆன்மிகம், அரசியல், அறிவியல், சினிமா, இலக்கியம், விளையாட்டு எனப்பல்துறைகளைத் தாங்கி வருகின்றது. தமிழ்மக்களின் குரலாக ஓங்கி ஒலித்து வருகின்றது.

வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் எல்லாத்தரப்பினராலும் விரும்பிப் படிக்கப்பட்டு வருகின்றது. இங்கு மொழிநடை தொடர்புபடுத்துவதற்குச் சொல்லப்படுகின்ற கதைகள், எழுத்துநடை, எல்லாமே மக்களை இலகுவில் வாசிக்கத் தூண்டுகிறது. ஆலடி மாநாடு, வியாசர் பதில்கள், பேஸ்புக்கில் பார்த்ததில் பிடித்தது, சிறுவர் அரங்கம் என்பனவற்றைப் படிப்பேன். ஆலடி மாநாடு சமகாலப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுவதோடு சமூகத்தில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றது.

சமூகத்தின் உறங்குநிலையிலுள்ள பொதுச் செயற்பாடுகளை தட்டியெழுப்பி விடுகிறது. அபிவிருத்தி இல்லாதிருந்த பல இடங்களைச் சுட்டிக்காட்டியது வலம்புரி. இதனால் குறித்த இடங்கள் குறித்த காலத்தினுள் அபிவிருத்தியைக் கண்டடைந்தது. பாடசாலையில் சிறார்களுக்கு சிறுவர் அரங்கப்பகுதியினூடாக சிறுவர்களின் உளவிருத்திக்கு உதவி புரிகின்றது. வலம்புரி நாளிதழ் தாங்கி வரும் விடயங்கள் யாவும் பயனுடையது.



**வ.தளையசிங்கம் வர்த்தகர், கொடிகாமம்.**

வலம்புரிப்பத்திரிகை 22 வருடங்களை பூர்த்தி செய்து 23 ஆவது அகவையில் காலடி வைப்பதை மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம். கடந்த 10 வருடங்களாக வலம்புரியை தவறாமல் வாசித்து வருகின்றோம். செய்திகளில் ஆசிரிய தலையங்கம் எமக்கு மிகவும் பிடித்தமானது. இராசி பலன் மிகவும் விரும்பிப் பார்ப்போம். பேஸ்புக் நகைச்சுவைகளும், இன்று ஒரு தகவலும், சங்குநாதத்தில் வருகின்ற கேள்வி பதிலும் சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டும். 23 ஆவது அக்கைவகளிலும் இந்நன்னாளில் வலம்புரி மென்மேலும் சிறக்க எமது இனிய வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றி மனிதர்களுக்கு ஏற்ற சட்டமாக உருவாக்குங்கள்

## ரிஷாட் வலியுறுத்து

(நெளுக்குளம்)



அப்பாவி இளைஞர்களை கைது செய்யும் மோசமான பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றி மனிதர்களுக்கு ஏற்ற சட்டமாக உருவாக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியூதீன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டுவிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர். இந்த அரசாங்கம் ஒரு கொள்கையுடன் பயணிப்பதாக எமக்கு தெரியவில்லை. தேர்தலுக்கு முன்னர் ஒன்றை சொன்னார்கள் அதன் பிறகு ஒவ்வொன்றும் மாறி நடக்கின்றது. இன்று விவசாய செய்கைக்குரிய பசளை இல்லாமல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இலவசமாக தருவோம் என்றார்கள் ஆனால் இன்று 20 ஆயிரம் ரூபாய்க்கு கூட அது கிடைக்கவில்லை.

பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இவ்வாறு நாடு தொடர்ந்து பயணித்தால் அதல பாதாளத்திற்கு செல்லும் நிலைமையே ஏற்படும். பயங்கரவாத தடைச்சட்டமானது இந்த நாட்டிலே ஒரு அவசரத்திற்காக தற்காலிகமாக அந்த காலப்பகுதியிலே கொண்டுவரப்பட்டது. அந்தச்சட்டத்தினை பயன்படுத்தியே பாராளுமன்ற உறுப்பினரான என்னை கைதுசெய்தார்கள். அதே போல கிளிநொச்சி முல்லைத்தீவு, மட்டக்களப்பு பகுதியில் உள்ள தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் இரண்டு வருடம் என சிறையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே இந்தச்சட்டத்திலே உடனடியாக மாற்றம் செய்ய வேண்டும் என தெரிவித்தார். (4-5-299)

# முகமாலையில் விபத்து இருவர் படுகாயம்

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலை பகுதியில் நேற்று முன்தினம் இரவு விபத்து ஒன்று இடம்பெற்றது.

பளைபொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலை ஏ9 வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளும் ஹயஸ் ரக வாகனமும் மோதியுள்ளன.

இதனையடுத்து ஹயஸ் ரக வாகனத்தின் பின்னே வந்து கொண்டிருந்த முச்சக்கர வண்டி திடீரென முன்னால் சென்ற ஹயஸ் வாகனம் விபத்துக்குள்ளானதால் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த நபரும் முச்சக்கரவண்டியில் பயணித்த முச்சக்கர வண்டி சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் பளை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-316)



சௌபாக்யா வாரத்தை முன்னிட்டு துணுக்காய் பிரதேச செயலகத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (படம் : தவசீலன்)

# ஸார்ப் நிறுவனத்தால் வெடிபொருட்கள் அகற்றும் பணி தொடர்ந்து முன்னெடுப்பு

(கண்டாவளை)



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் 18 இலட்சத்து 9 ஆயிரத்து 647 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 30 ஆயிரத்து 414 அபாயகரமான வெடிபொருட்கள் இதுவரை அகற்றப்பட்டுள்ளதாக ஸார்ப் நிறுவனம் நேற்று அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-315)



யாழ்.இந்தியதுணைத்தூதரகம் மற்றும் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் இணைந்து ஏற்பாடு செய்த சித்தமருத்துவமுகாம் கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கிளிநொச்சிமாவட்ட ஆயுர்வேத வைத்திய அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர். (படம் : தேவானந்தன்)

# கரும்புத்தோட்ட காணியில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை வெற்றி

(கிளிநொச்சி)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்டக் காணியில் தற்காலிகமாக மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை சிறப்பாக விளைந்துள்ளது. இதனால், காணிகளைப் பெற்றுக்கொண்ட மக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தனியாரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த கரும்புத்தோட்டக் காணியை, அந்தப் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கமைய, கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா விடுவித்து, மீண்டும் கரும்புச்செய்கையை ஆரம்பிக்கும் வரையில் தற்காலிகமாக காலபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்காக காணிகளற்ற மக்களுக்கு பகிர்ந்தளிக்க பணித்திருந்தார்.

இதன் பிரகாரம், கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், அக்கராயன், கோணாவில், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த காணிகளற்ற மக்களுக்கு சுமார் 150 ஏக்கர் காணி இம்முறை காலபோக நெற்செய்கைக்காக தற்காலிகமாக வழங்கப்பட்ட நிலையிலேயே அது இவ்வாறு சிறப்பாக விளைந்துள்ளது.

நெற்செய்கைக்காக காணிகள் வழங்கப்பட்ட மக்களுக்கு அதற்கான பசளையை வழங்கும் ஏற்பாடுகளையும் செய்யுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கமநல சேவைகள் உதவி ஆணையாளரைப் பணித்திருந்த நிலையில், அவர்களுக்கான பசளை வழங்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (4-5)

# பொதுக்கூட்டமும் நிர்வாக சபை தெரிவும்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் பொதுக்கூட்டம் அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் புதிய நிர்வாக சபைக்கான தெரிவு இடம்பெற்றது. அந்தவகையில் புதிய தலைவராக எல்.சிவச்செல்வன், செயலாளராக எஸ்.ஜெபநேசன், உபதலைவராக என்.கிருபாநிதி, உப செயலாளராக க.கிருஸ்ணதாஸ், பொருளாளராக கே.கோபிதாஸ், ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (4-5-299)

# நிரந்தர கட்டடம் இன்றி புலோலி உப தபால் நிலையம்

(கரணவாய்)

நிரந்தர கட்டடம் இன்மை காரணமாக புலோலி உப தபால் நிலையம் தொடர்ச்சியாக இடம் மாறி மாறி இயங்குவதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். புலோலி உப தபால் நிலையத்துக்கு நிரந்தர காணியோ, நிரந்தர கட்டடமோ இல்லை. இதன் காரணமாக வாடகைக்கே உப தபால் நிலையம் இயங்கி வருகிறது.

சாவகச்சேரி வீதி, மந்திகையில் நீண்ட காலமாக இயங்கி வந்த உப தபால் நிலையம் பின்னர் மந்திகை மருத்துவமனை வீதிக்கு மாற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கொடிகாமம் வீதி, புலோலியில் இயங்கி வந்த உப தபால் நிலையம் தற்போது மீண்டும் இடம் மாறி மில் லேன், மந்திகையில் தற்போது இயங்கி வருகின்றது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புலோலி உப தபால் நிலையத்திற்கு மந்திகை நகர் பகுதியில் நிரந்தர ஒரு இடத்தை தேர்ந்தெடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணெண்ணெயின் கேள்வி அதிகரிப்பு

(கொழும்பு)

**மண்ணெண்ணெயின் நாளாந்த கேள்வி 100 மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.**

இதுவரையான காலத்தில் மண்ணெண்ணெயின் நாளாந்த கேள்வி 500 மெற்றிக் தொன்னாக இருந்து வந்தது.

தற்போது அது 600 மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக சந்தையில் பற்றாக்குறையில்லாமல் விநியோகத்தை பராமரிக்க வேண்டியுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மீனவ சமூகத்துக்கான மண்ணெண்ணெய் விநியோகத்தையும் உரிய முறையில் மேற்கொண்டு வருவதாகவும் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த கேள்வி அதிகரிப்புக்கு எரிவாயு கொள்கலன்களின் பற்றாக்குறையும் காரணம் என்று கருதப்படுகிறது. (நி-5)

# தர்கா நகரில் புகையிரத விபத்து சிறுவன் உயிரிழப்பு

(களுத்துறை)

அளுத்கம புகையிரத நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் காலை காலியில் இருந்து கல்கிஸ்ஸை நோக்கி பயணித்த புகையிரதம் மோதியதில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

தர்கா டவுன், பிரதான வீதியை சேர்ந்த 9 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுவனின் சடலம் களுத்துறை நாகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அளுத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# சமையல் எரிவாயுவின் தரத்தை பரிசோதனை செய்ய வசதிகள் இல்லை

## என்கிறார் இலங்கை தர நிர்ணய நிறுவனப் பணிப்பாளர்

(கொழும்பு)

இலங்கை தர நிர்ணய நிறுவனத்திடம், சமையல் எரிவாயுவின் தரத்தைப் பரிசோதனை செய்வதற்கு போதுமான வசதிகள் கிடையாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெற்று சிலிண்டர்கள், சமையல் எரிவாயு அடுப்பு மற்றும் சிலிண்டருடன் தொடர்புடைய காஸ், ரெகுலெட்டர் உள்ளிட்ட பாகங்களையே இதுவரையில் தர நிர்ணயம் செய்து வருவதாக இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் பணிப்பாளர் சுனந்த பெர்னாண்டோ ஆங்கில ஊடக மொன்றுக்குத் தெரிவித்தார்.

தர நிர்ணயம் தொடர்பில் புதிய கொள்கைகள் வகுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

சமையல் எரிவாயு தொடர்பில் பரிசோதனை செய்வதற்குப் போதியளவு சாதனங்கள் கிடையாது.

இவ்வாறான பரிசோதனைகளை செய்வதற்கு அதிநவீன ஆய்வுகூட வசதிகள் தேவைப்படுவதாக அவர் குறிப்பிட்டார். (நி-5)

## டொலர் நெருக்கடி

# கையிருப்பில் உள்ள தங்கத்தை விற்பனை செய்ய யோசனை

(கொழும்பு)

அதிகரித்துள்ள அமெரிக்க டொலர் கையிருப்பு தொடர்பான பிரச்சினை காரணமாக நாட்டின் அந்நிய செலவாணி கையிருப்பை அதிகரிப்பதற்காக கையிருப்பில் உள்ள தங்கத்தை விற்பனை செய்யும் யோசனை ஒன்று கடந்த வாரம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது.எவ்வாறாயினும் அமைச்சர்கள் இந்த யோசனை தொடர்பாக பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயம் சம்பந்தமாக அரசாங்கம் பொருளாதார நிபுணர்களின் நிலைப்பாடுகளை கேட்டறிய வேண்டும் என பல அமைச்சர்கள் இதன் போது தெரிவித்தனர்.

எது எப்படி இருந்த போதிலும் அமைச்சரவைக் கூட்டத்தில் தங்கத்தை விற்பனை செய்வது தொடர்பாக இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என தெரியவருகிறது.

இலங்கையின் திறைசேரியில் சுமார் 300 மில்லியன் டொலர்களுக்கு மேற்பட்ட தங்கம் கையிருப்பில் இருப்பதாக அண்மையில் பாராளுமன்றத்தில் தகவல் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## கோபக்காரர்களை எப்படிச் சமாளிப்பது?

கோபக்காரர்கள் இரத்தம் கொதித்துக்கத்தும் போது நாம் சற்றும் பதட்டப்படாமல் அமைதியாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.பதிலுக்கு நாமும் கத்தினால், அல்லது நான்கு வார்த்தை காரசாரமாகப் பேசினால், நிலைமை சீரழியுமே தவிரச் சீரடையாது.

மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப் புக் கொடுத்து அவற்றை வடியவிடுங்கள். எரியும் எண்ணெய் கொதித்து அடங்கட்டும். அதில் , சமாதானப்படுத்த முயல்வது என்ற தண்ணீர் ஊற்றும் முயற்சி வேண்டாம். தண்ணீர் கனமானது. எண்ணெய் மிதந்து மேலும் எரியத் தொடங்கும்.

மாறாக, எதிர்த்துப் பேசினால்? நம் கோபத்திற்கு மதிப்பில்லாமல் ஆக்குகிறார்களே நம் கோபத்தில் நியாயமில்லை என எண்ணுகிறார்களே எதிர்த்துப் பேசுகிறார்களே என்ற வேதனையில், அவர்களது கோபம் மேலும் அதிகமாகும்.

சிலர், கோபத்தில் சில கேள்விகளைப் பெயருக்குக் கேட்பார்கள். ஆனால் பெரும்பாலும் அவற்றிற்கு விளக்கம் எதிர்பார்க்க மாட்டார்கள்.

ஆனால் நிச்சயமாகப் பதிலை எதிர்பார்க்கிறார்கள் என்றால் மிகச் சுருக்கமாகவும் முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டும் பதில் சொல்ல வேண்டும். அதாவது உங்கள் சொல்லால் மட்டுமல்லாமல் உணர்ச்சி வெளிப்பாட்டினாலும் கூட உங்கள் உள் எரிச்சலை வெளிக்காட்டிக் கொள்ளக்கூடாது.

அப்படிக் காட்டிக் கொண்டால், நீங்கள் தவறு செய்திருந்தாலும் தவறு செய்யாவிட்டாலும் உங்களைப் பற்றித் தவறான எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டு விடும்.

மாறாக அமைதியாக இருந்து விட்டீர்களானால் உங்கள் மீது அனுதாபமும் இரக்கமும் பிறக்கும். உங்களைப் பொறுத்த அளவில் அவர்கள் குற்ற உணர்வோடு இருப்பார்கள்.

அந்த நிலையில் , நல்ல சமயம் பார்த்து, தவறுக்கும் தங்களுக்கும் எவ்வளவு தூரம், எங்கே தவறு நடந்தது என்பன போன்றவற்றை எடுத்துச் சொல்லலாம். உண்மையிலேயே அத் தவறுக்கு நாம் காரணமானால் அதற்காக வருத்தம் தெரிவிக்கலாம்.

உரிமையும் சூழ்நிலையும் இடம் கொடுக்குமானால் மன்னிப்புக் கூடக் கேட்கலாம் தவறில்லை. மறுமுறை உங்களைக் கோபிக்க அவர்கள் அஞ்சுவார்கள். அவர்களது கோபத்தினால் உங்கள் மனம் பட்டபாட்டை எடுத்துக் கூறுவது இன்னும் பயனளிக்கும். அவர்களது பாச உணர்வுகளுக்கு நீங்கள் பாத்திரமாவீர்கள். அவர்கள் இயல்பிலேயே கோபக்காரராக இருந்தால் கூட உங்களிடம் மட்டும் விதிவிலக்காக நடந்து கொள்ளும் மாயத்தை நீங்கள் மெல்ல மெல்ல உணர ஆரம்பிப்பீர்கள்.

இவற்றையெல்லாம் விட்டுவிட்டு, வாக்கு வாதங்களை வளர்த்துக் கொண்டே போனால், அது நன்மையைக் காட்டிலும் நாசத்திற்கே அடிகோலும். மேன்மேலும் நாம் செய்த தவறுகள் வெளிப்படவும் நல்லுறவு பாழ்படவும் செய்யும். கருத்து வேற்றுமைகள் குருத்து விட்டு உயர்ந்த மரமாய் நின்று, பெருத்த இடைவெளியை ஏற்படுத்தும்.

மௌனம்; அவசியமேற்பட்டால் சுருக்கமான பதில்; தவறு இருப்பின் ஒப்புக்கொள்ளல் ; இயலுமானால் மன்னிப்புக் கேட்டல்; பின்னர் நிலைமைகளை விளக்குதல் ஆகியவற்றைக் கையாண்டால் நம் மனம் எப்போதும் மகிழ்ச்சியாய் இருப்பதோடு, கோபக்காரர்களும்–

வெட்டிப் பாம்பாய்
அடங்கிப் போவார்கள்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒமிக்ரோனை தடுக்க தவறாது தடுப்பூசி செலுத்துங்கள்

## சுகாதார அதிகாரிகள் வலியுறுத்து



(கொழும்பு)

ஒமிக்ரோன் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தார்.

குறிப்பாக இலங்கையில் ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்டுள்ள நால்வரில் மூவர் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் என சுகாதார அமைச்சின் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

இதன் காரணமாக ஒமிக்ரோன் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் உடல் நிலை மோசமாக பாதிக்கப்படவில்லை என்பதால், அவர்களை தீவிர கிசிச்சை பிரிவில் அனுமதிக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், ஒமிக்ரோனை தவிர்ப்பதற்கு தடுப்பூசிகளை செலுத்திக்கொள்வது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## துன்பங்களை போக்கி மங்கலம் தரும் ராம நவமி



மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் ராமாவதாரம் பரிபூரண அவதாரமாகும். அறமே வாழ்வின் ஆன்மீக ஜோதி. அறத்தை வளர்ப்பதற்கும், மனிதனிடம் மறைந்து கிடக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவதற்கும் ஸ்ரீமன் நாராயணன் ராமனாக அவதாரம் செய்தார்.

ஒரு வில், ஒரு சொல், ஒரு இல் என உலகிற்கு வாழ்ந்து காட்டிய ராமர், பங்குனி மாதம் வளர்பிறை சுக்லபட்சத்தில் நவமி திதியில் புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தார். அன்றைய தினமே ராமநவமியாக கொண்டாடப்படுகிறது.

ராம நாமமானது அஷ்டாட்டரமான 'ஓம் நமோ நாராயணாய' என்பதில் 'ரா' என்ற எழுத்தையும், பஞ்சாட்சரமான 'நமச்சிவாய' என்ற எழுத்தில் 'ம' என்ற எழுத்தையும் சேர்த்து 'ராம' என்றானது. ராவணனை அழிப்பதற்காக பூமியில் தோன்றிய ஸ்ரீராமனின் அவதார வரலாறு மகிமை வாய்ந்தது.

அயோத்தினை ஆண்டு வந்த தசரத சக்கரவர்த்திக்கு கோசலை, சுமித்ரா, கைகேயி ஆகிய மூன்று மனைவிகள் உண்டு. தனது புஜ, பல பராக்கிரமத்தால் உலகெங்கும் வெற்றிக்கொடி நாட்டிய தசரதருக்கு நாட்டை ஆள ஆண் வாரிசு இல்லாதது பெரும் மனக்குறையாக இருந்தது. இதுபற்றி தனது குல குரு வசிஷ்ட மகரிஷியிடம் அவர் கூறினார்.

வசிஷ்டரின் ஆலோசனைப்படி, மகரிஷி ருஷ்யஷ்ருங்கர் உதவியுடன் புத்திரகாமேஸ்டி யாகம் செய்தார். அந்த யாகத்தின் விளைவாக யக்னேஸ்வரர் தோன்றி பாயசம் நிறைந்த ஒரு கிண்ணத்தை கொடுத்து அதை மனைவிகளிடம் கொடுக்கும்படி கூறினார்.

தசரதர் பாயசத்தை தனது மனைவிகளுக்கு கொடுத்தார். சில நாட்களுக்கு பிறகு கோசலை, கைகேயி, சுமித்ரா ஆகிய மூவரும் கர்ப்பமுற்றனர். பங்குனி மாதம் நவமியன்று கோசலை ராம பிரணை பெற்றார். கைகேயிக்கு பரதனும், சுமித்ராவுக்கு லட்சுமணன், சத்ருகனன் ஆகியோர் பிறந்தனர். தசரதனுக்கு புத்திரனாக அவதரித்த ராமன், விசிஷ்டரிடம் வித்தைகளை கற்றார்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## மின் தூக்கி உடைந்து வீழ்ந்ததில் பெண்ணொருவர் பலி

(கொழும்பு)

கடுகன்னாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிலிமத்தலாவ பகுதியில் கட்டடம் ஒன்றின் மின் தூக்கி உடைந்து வீழ்ந்ததில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

பொலித்தீன் பைகள் மற்றும் அரிசி மூட்டைகள் தயாரிக்கும் மூன்று மாடிகளை கொண்ட கட்டடத்தின் மின்தூக்கியே இவ்வாறு உடைந்து வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அனர்த்தத்தினால் காயமடைந்த மற்றொரு பெண் சிகிச்சைக்காக பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி-5)

## மேல் மாகாணத்தில் 147 நபர்கள் கைது

(கொழும்பு)

பண்டிகை கால குற்றங்களை தடுக்கும் நோக்கில் மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட விசேட குற்றத்தடுப்பு நடவடிக்கையின் கீழ் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 147 சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-5)

## போலி தங்க நாணயங்களுடன் இளைஞன் கைது

(கொழும்பு)

குருவிட்ட பகுதியில் போலி தங்க நாணயக் குற்றிகளை விற்பனை செய்ய முற்பட்ட இளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட 19 வயதுடைய இளைஞன் அவிசாவளை பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபரிடம் இருந்து 2 கிலோ கிராம் நிறையுடைய 960 போலி தங்க நாணய குற்றிகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் 6 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தங்க நாணயக் குற்றிகளை விற்பனை செய்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (நி-5)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 380 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 150 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 900 | 900 | 900 | 800 |
| தக்காளி | 500 | 400 | 400 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 70 | 50 |
| கோவா | 350 | 350 | 450 | 400 |
| கரட் | 340 | 480 | 520 | 600 |
| பூசணி | 60 | 70 | 50 | 80 |
| புடோல் | 340 | 300 | — | 280 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 200-250 | 280 |
| பெரிய வெங்காயம் | 240 | 240 | 220 | 240 |
| பாகற்காய் | 650 | 450 | 600 | 800 |
| வெண்டிக்காய் | 240 | 200 | 200 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 130 | 150 |
| பயற்றங்காய் | 550 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 340 | 350 | 450 | 450 |
| பீற்றூட் | 280 | — | — | 320 |
| கறிமிளகாய் | 450 | 700 | — | 800 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 380 | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 380 | 350 | — | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | — | 80 |
| தேசிக்காய் | 250 | 250 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 240 | 180 | 220 |
| வெங்காயப்பூ | 450 | 500 | — | — |
| முள்ளங்கி | 250 | 200 | — | 280 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 25 | 40 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 100 | — | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## உழைப்பை மறக்கலாமா?


நீங்களும் காட்டிற்குத் திரும்பி வாருங்கள்." "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" "காட்டில் நாம் எவ்வளவு சுதந்திரமாக வாழ்கிறோம்.

அருவிக் கரையில் மனிதர்கள் சாப்பிட்டு மீதம் போடுகிற உணவை உண்ண வேண்டிய நிலைமை நமக்கு எதற்கு? காட்டில் இல்லாத உணவா? குரங்குகள் சாப்பிட்டு விட்டு மண்ணில் போடுகிற பழங்களின் விதைகளிலிருந்து புதிய மரங்கள் முளைத்து வளர்கின்றன.

அந்த மரத்திலுள்ள கனிகளை மற்ற குரங்குகள் உண்ணுகின்றன. அணில்கள் மண்ணில் புதைத்து வைத்து மறந்து போய்விடுகிற விதைகள் முளைத்து மீண்டும் பருப்புகளையும் தானியங்களையும் விளைவிக்கின்றன. அவற்றை ஏராளமான அணில்கள் உண்ணுகின்றன. மயில்கள் உண்டு இடுகிற எச்சத்தில் எத்தனையோ மரங்கள் முளைக்கின்றன. அவற்றிலும் கனிகள் கனிகின்றன.

மற்ற மயில்கள் அவற்றை உண்கின்றன. இப்படி நாமே நமக்குத் தெரியாமல் உழைத்து உண்கிறோம் பிறகு ஏன் உணவுக்காக மனிதர்களைத் தேடிச் செல்ல வேண்டும்?" என்று கேட்டது மான்.

"அப்படியானால் அருவிக்கரையில் மனிதர்கள் தருகின்ற உணவை உண்ணக் கூடாதா நண்பா?" "நீங்கள் யாராவது சுத்தமான



உணவை உண்டீர்களா? நிம்மதியாக பயமின்றி உண்ண முடிந்ததா? இல்லையே. மனிதர்கள் தாங்கள் உண்ட எச்சில் உணவை உங்களுக்குக் கொடுத்தார்கள்.

கூடவே மனிதர்கள் உங்களை எப்படி எல்லாம் துன்புறுத்தினார்கள் என்று நானும் பார்த்துக் கொண்டு தான் இருந்தேன். மயிலின் தோகையைப் பறித்தார்கள். குரங்கைக் கல்லால் அடித்தார்கள். அணிலைப் பிடித்துச் செல்லப் பார்த்தார்கள்.

இப்படி மனிதர்களுக்குப் பயந்து அசுத்தமான உணவை உண்பதைவிட நிம்மதி யாக, சுதந்திரமாகக் காட்டில் கிடைக்கும் இயற்கையான உணவு களை உண்பது நல்லது அல்லவா?"மான் சொன்னதைக் கேட்டு மூன்றும் யோசித்தன. 'மான் சொல்வதும் உண் மை தானே. இப்படி உணவுக்காக அடுத்தவர் முன் கையேந்தி நிற்பதை விட நம் உழைப்பில் உணவைத் தேடி உண்பதுதானே நல்லது.

இல்லை என்றால் உழைப்பையே மறந்து சோம்பேறி ஆகி விடுவோமே' என்ற உண்மையை அவை புரிந்து கொண்டன.

அவை மூன்றும் மானிடம், "நீ சொல்வது சரிதான்.நம் உணவை நாமே தேடி உண்பதன் மகிழ்ச்சி இதில் இல்லை.

நாளையிலிருந்து நாங்கள் இந்த அருவிக் கரைக்கு வர மாட்டோம். காட்டில் சுதந்திரமாக வாழலாம்" என்று சொன்னபடி மானுடன் காட்டுக்கே திரும்பிச் சென்றன.

(முற்றும்)

# மகாபாரதம்




அதன் கண்ணோட்டத்தில் எல்லோரும் சமமானவர்களே. மந்திரத்தாலோ, மருந்தாலோ, செல்வத்தாலோ, தானத்தாலோ, அரிய தவத்தாலோ, புகழாலோ, அதிகாரத்தாலோ எதனாலும் எமனை ஏமாற்ற முடியாது.

எனவே உமா உலகில் மாற்ற முடியா மாபெரும் சக்தி மரணம் தான் என்பதைத் தெளிவாக உணர். ஆதலால் வாழும் காலத்தில் எவ்வுயிர்க்கும் துன்பம் தராது வாழ வேண்டும்" என்றார் மகேஸ்வரன்.

**விதியின் வலிமை**

விதியின் வலிமை பற்றி மகேஸ்வரிக்கு மகேஸ்வரன் உரைத்தது.

"மரணத்துக்குரிய நேரம் வந்தபோது அதனை யாரும் கடக்க முடியாது என்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. விட்டில் பூச்சிகள் அழியும் காலம் வரும்போது தாங்களே வந்து எரியும் விளக்கில் வீழ்ந்து மாள்கின்றன.

காட்டில் திரியும் மான்களில் எதற்கு முடிவு காலம் வந்ததோ அது தான் வலையில் அகப்படுகிறது. கொல்வதற்காகக் கொலைக் களத்திற்கு அனுப்பப்படும் விலங்குகளில் ஆயுள் குறைந்ததுதான் முதலில் கொல்லப் படுகிறது.

எல்லாமே உடனே கொல்லப்படுவதில்லை. விரைந்து பறந்து செல்லும் பறவைகள்கூட ஆயுள் காலம் முடிந்தால் சுட்டுத் தள்ளப்படுகின்றன. தண்ணீரில் இருக்கும் மீன்கள் அனைத்துமா ஒரே நாளில் வலையில் அகப்படுகின்றன? ஆயுள் குறைந்தவை மட்டுமே வலையில் சிக்குகின்றன.

உழவன் உயிர்களைக் கொல்ல வேண்டும் என்றா நிலத்தை உழுகின்றான். அந்த எண்ணம் அவனுக்கு இல்லை. ஆயினும் ஆயுள் முடிவால் கலப்பை நுனியால் பல உயிர்கள் இறக்கின்றன. யானை நடக்கும் பொழுது சாகும் உயிர்களை விட மனிதன் நடக்கும் போது இறக்கும் நுண்ணுயிர்கள் அதிகம். ஒரு நாளைக்கு மனிதன் ஆயிரம் நடை நடக்கிறான். யானை அப்படி நடப்பதில்லை. எது எப்படியாயினும் இறக்கத்தக்கவை தான் இறக்கின்றன.

ஆகவே எந்தப் பிராணியும் விதியை வெல்ல முடியாது. இறக்க தக்கவைதான் இறக்கும். விடுபடத் தக்கவை விடுபடும்.

**போரில் இறப்போர் கதி**

போரில் இறப் போர் கதி பற்றி மகேஸ்வரி வினவ ஈஸ்வரன் சொல்கிறார். "போர்க்களத்தில் இரு திறத்துப் படைகளும் மோதும்போதும், யானைப்படை வீரரும் குதிரைப் படை வீரரும் தேர்ப்படை வீரரும் காலாட் படை வீரரும் உற்சாகம் குன்றாமல் போராடுகின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.
– திருவள்ளுவர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அகவை 22இல் உங்களோடு...

அன்பு வாசகர்களே! உங்கள் வலம்புரிக்கு இன்று அகவை 22.

1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி வலம்புரி தமிழ் மண்ணில் முகிழ்த்தது.

காத்தற்கடவுளாகிய கண்ணபரமாத்மாவின் கரங்களில் இருக்கக்கூடிய வலம்புரிச் சங்கு அறத்தின் அடையாளம்.

குருசேத்திரத்தில் வலம்புரி சங்கநாதமாய் ஒலிக்கிறது.

அந்த ஒலி அறத்தை – தர்மத்தை நிலை நிறுத்துவதற்கானதென்பது உணர்தற்குரியது.

அறம் பொது நிலையிலும் தனிப்பட்ட முறையிலும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதாலேயே உங்கள் நாளிதழுக்கு வலம்புரி என்று நாமம் சூட்டப்பட்டது.

வலம்புரிச் சங்கின் மூச்சொலியைஅதன் பிறப்பிலேயே முடித்துவிட முயன்றவர்கள் உளர்.

ஆனால் வலம்புரியின் உயிர்ப்பு இறைவனால் கொடுக்கப்பட்டது.

நீதி, நியாயம், நேர்மை, அன்பு, அறம், இறைநம்பிக்கை என்ற உயரிய பண்புகளோடு வாழுகின்ற எம் மக்கள் வலம்புரிக் குழந்தையைத் தம்கரம் பற்றித் தூக்கினர். நெஞ்சோடு அணைத்து பாதுகாத்து வளர்த்தனர்.

சமயத் தலைவர்கள், ஆன்மீக சிந்தனையாளர்கள், மனிதப் பண்புடையோர் வலம்புரியின் வாழ்வுக்காய்ப் பிரார்த்தனை செய்தனர். ஆசி வழங்கினர்.

இறைஅருளும் குருவருளும் எங்கள் உயிரினும் மேலான வாசகர்களின் அன்பும் கடந்த 22 வருடங்களாக வலம்புரியைக் காத்தருளுகிறது.

அன்புக்குரிய பெருமக்களே! வலம்புரி உங்களுடையது. பொதுமக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை வெளிப்படுத்துவது அதன் கடமைகளில் ஒன்று.

தவிர, எச்சந்தர்ப்பத்திலும் எவரையும் வஞ்சிக்க வேண்டும் என்ற அழுக்காறுடன் வலம்புரி ஒருபோதும் செயற்படவில்லை.

அதேநேரம் தனி மனித கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதிலும் வலம்புரி உறுதியாக உள்ளது.

இந்த அடிப்படையிலேயே அதன் பணி தொடர்ந்து செல்கிறது.

எம்மைப்பொறுத்தவரை பத்திரிகைத் தர்மத்தை என்றும் பாதுகாத்து எங்கள் பணி தொடர்வோம். இதனை மனம் வாக்கு காயத்தால் சத்தியம் செய்கிறோம்.

உங்களின் அன்பும் ஆசியும் அரவணைப்பும் என்றும் எம்மை நல்வழிப்படுத்தும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இறைவன் எம்மிடம் ஒப்படைத்த பணியை அவனுக்குக் கணக்குக் கொடுக்கும் அளவில் நடுவுநிலை நின்று ஆற்றுவோம் என இவ்வேளையில் உறுதிகூறி, 23ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றோம் உங்கள் பேராதரவோடு.

# அரசாங்கம் பிடிவாதமாக செயற்பட்டால் நாடு பேராபத்தில் வீழ்ந்துவிடும்

## ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனவரி மாதம் 18 ஆம் திகதி பாராளுமன்ற அமர்வினை மீள ஆரம்பிக்கும் தினத்தில் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை சர்வதேச கடன் தொகையாக செலுத்த வேண்டியுள்ளது.

எனவே சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்லாது அரசாங்கம் பிடிவாதமாக செயற்பட்டால் நாடு பொருளாதார ரீதியில் பேராபத்தில் விழுந்துவிடும். இதனால் மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு -7, 5 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள இல்லத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடிய போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், பாதுகாப்பான பொருளாதாரத்தின் உத்தரவாதத்தை ஐக்கிய தேசிய கட்சியினால் மாத்திரமே உறுதிப்படுத்த முடியும் என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

எனவே நாட்டிற்கான கடமையை செய்ய வேண்டும். மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்பும் வகையில் செயற்பட வேண்டும். அடுத்துவரும் தேர்தல்களை மையப்படுத்தி இளையோர்களை ஒன்றிணைத்து புதிய திட்டங்களை வகுக்க வேண்டும். இளம் சமூகத்தினர் மீண்டும் ஐக்கிய தேசிய கட்சி மீது நம்பிக்கை கொண்டு செயற்பட ஆரம்பித்துள்ளனர். இது முக்கியமான ஒன்றாகும். கிராமங்களுக்கு சென்று மக்களை ஒன்றிணைத்து அனைவரும் செயற்பட வேண்டும். அரசாங்கத்தின் பிடிவாதத்தால் மக்களே பாதிக்கப்படுகின்றனர். ஜனவரி மாதம் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தை ஜனாதிபதி மீள ஆரம்பிக்கும் போது 500 மில்லியன் டொலரை சர்வதேச கடனாக இலங்கை செலுத்த வேண்டும் என்றார். (ஞா)

### அனைத்து நெருக்கடிகளுக்கும் பொறுப்பேற்று

## அரசாங்கம் விரைவாக பதவி விலகவேண்டும்

### எதிர்க்கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அனைத்து நெருக்கடிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் முட்டாள்த்தனமான தீர்மானங்களே காரணமாகும்.

ஆகவே உரம், சமையல் எரிவாயு மற்றும் டொலர் நெருக்கடி உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முழு அரசாங்கமும் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அரசாங்கத்தின் முறையற்ற பொருளாதாரக் கொள்கை காரணமாகவே ஃபிட்ச தரப்படுத்தலில் இலங்கை பின்தள்ளப்பட்டுள்ளது என்றும் கூறினார். (ஞா)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட திரிசாரணர் குழாம் மற்றும் மானிப்பாய் லயன்ஸ் கழகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் நாளை 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை அரியாலை காந்தி நிலையத்தில் இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஞா)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 21ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

வவுனியா பிரதேசத்தில் கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், வைரவப்புளியங்குளம், ஆதிவிநாயகர் கோவிலடி, அறுகம்புல்வெளி, குருமன்காடு பிள்ளையார் கோயிலடி, கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், குகன் நகர், குழுமாட்டுச் சந்தி, குருமன்காடு கோவில் வீதி, மறக்காறம்பளை- கணேசபுரம், நாகரிலுப்பைக்குளம், நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பட்டைகாடு, வேப்பங்குளம் 6 ஆவது வீதி, பட்டாணிச்சூர் புளியங்குளம், பொன்னாவரசங்குளம், வைரவப்புளியங்குளம், அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை- காத்தான் கோட்டம், தெய்வேந்திரம் அரிசி ஆலை, யு.என். எச்.சி.ஆர்.- குருமன் காடு, அரசன் அரிசி ஆலை, வேப்பங்குளம்,. சியாம் அரிசி ஆலை (சிவா அரிசி ஆலை), அளுத்வத்த, ஆசிக்குளம், போகஸ் வேவ, மாமடுவ கிராமம், மகாகச் சக்கொடிய, மல்மடுவா (மகாகச்சக்கொடிய), நாமல்கம, நந்தி மித்திரகம, பிரப்பன்மடு, சலிலிங்கம், சி.இ.சி.கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இல்லற மலர்ச்சி



உண்மையான நிலை என்னவென்றால், நாம் செய்த பாவம், புண்ணியம் இரண்டும் நம்மிடத்திலே உள்ளன. இந்த இரண்டையும் சரிப்படுத்துவதற்கு இறைநிலை பாரபட்சமில்லாத நீதிபதியாக அவ்வப்போது செயலிலே விளைவு தந்து கொண்டிருக்க வேண்டுமென்று சொன்னால், நெருங்கிய உறவிலே, இணைந்த உறவிலே உள்ளவர்கள் மூலமாகத் தான் அதிகமான அளவு செயல்பட முடியும். விளைவு வர முடியும். அப்பொழுது இறைவனுடைய வரமாகட்டும், இறைவன் தரும் படிப்பினையாகட்டும், கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் அவர்கள் மூலமாகத் தான் அதிகமாக வெளிப்பாடு உண்டாகும்.

ஆகவே, இருவருமே ஒருவருக்கு ஒருவர் இறைவனே என்னுடைய மனைவியினுடைய வடிவத்திலே வந்து எனக்கு உறுதுணையாக இருக்கிறாள் என்று எண்ணவும், இறைவனே எனக்குக் கணவன் என்ற உறவிலே வந்து உறுதுணையாக அமைந்திருக்கிறான், என்னுடைய வினையின் பயனாக ஏதோ ஆங்காங்கு சில துன்பங்கள் வந்தாலும் அதை நாம் போக்கிக் கொள்ள வேண்டும் என்ற அளவிலே, இரண்டு பேருமே ஒருவரிடத்திலே ஒருவர், உண்மையான தெய்வநிலையைக் காணக் கூடிய அளவிலே, தெய்வப் பிரசன்னத்தை அறியும் அளவிலே மனதை உயர்த்திக் கொண்டீர்களேயானால் இல்லற வாழ்க்கையிலே இதுவரை நீங்கள் அனுபவித்திராத ஒரு மலர்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

36

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



முதலாவது குடியேற்றம் வரலாற்றுக்கு முந்தைய புரோட்டோ மலாய் காலத்தில் சாவகம், மற்றும் கலிமந்தான் ஆகிய இடங்களில் இருந்து இடம்பெற்றது. பின்னர் இந்துக்களின் ஆட்சிக் காலத்தில் சாவகத்தில் இருந்து இங்கு வந்து குடியேறினர்.

ஒரு காலத்தில் ஹிந்து ராஜ்யமாக இருந்த இந்தோனேசியாவில், கிபி 15 ஆம், 16 ஆம் நூற்றாண்டுகளில், முஸ்லிம்களின் படையெடுப்பிற்கு பிறகு பெரும்பான்மை மக்கள் முஸ்லிம்களாக மாற்றப்பட்டனர்.

இஸ்லாமியர்கள் மஜாபஹிட் (Majapahit) என்ற கடைசி ஹிந்து மன்னரை வீழ்த்திய பிறகு ஹிந்து மதத்தை விட்டு மாறாமல் இருந்த மக்கள் பாலிக்கு குடிபெயர்ந்தனர்.

**பாலி பற்றிய சில விடயங்கள்**

ஒவ்வொரு மார்ச் மாதத்தில் ஒரு நாள் மௌன விரதம். அதனை மௌனதினம் (Nyepi Day) எனச் சொல்கிறார்கள். அந்த நாளில் பாலித்தீவு முழுமைக்கும் விடு முறை. யாரும் பேசிக் கொள்ள மாட்டார்கள். வீட்டில் இருந்தபடியே தியானம் செய்வார்கள். பாலியில் உள்ள இந்து கலாசாரம் இந்திய ரிஷிகளிடமிருந்து வந்தது தான்.

ப்ாலி பள்ளிகளில் இன்றும் கூட ரிஷிகளை பற்றிய பாடங்கள் இருக்கின்றன. புராணங்களில் வரும் மார்கண்டேய, அகஸ்திய, பரத் வாஜ ரிஷிகளை பற்றி இந்தியாவில் யாருக்கும் தெரியாத நிலையில், இந்த ரிஷிகளை பற்றி பாலி குழந்தைகள் கூட தெரிந்து வைத்து இருக்கிறார்கள்.

பாலியில் ஆணுக்கும், பெண்ணுக்கும் தேசிய உடை "வேஷ்டி" தான். எந்த ஒரு பாலி கோவிலுக்கும் வேஷ்டி அணியாமல் ஆணோ, பெண்ணோ உள்ளே செல்ல முடியாது. அனைத்து பாலி பள்ளிகளிலும் கட்டயாமாக மூன்று வேலை சூரிய நமஸ்காரம் செய்கிறார்கள். அதேபோல மூன்று வேலையும் காயத்ரி மந்திரத்தை அவர்கள் பள்ளியில் சொல்லவேண்டும். பொதுவாக பாலி ரேடியோவில் மூன்று வேலை சூரிய நமஸ்காரம் செய்ய வேண்டிய நேரத்தில் அதை ஒலி பரப்புவார்கள்.

பாலி கோவில் பூசாரிகளின் சம்பளத்தை இந்தோனேசியா அரசாங்கமே கொடுக்கிறது. முஸ்லிம் மத நாடான இந்தோனேசியாவில் அனைத்து மத கோவில் பூசாரிகளின் சம்பளத்தை அரசே கொடுக்கிறது. இந்தோனேசிய நாட்டின் மூதாதையர்கள் அனைவரும் இந்துக்களே, அதனால் அவர்களின் பண்பாடுகளில் இந்திய கலாசாரமே அதிகம் கலந்துள்ளது. உலகில் அரிசி விளைவிக்கும் நாடுகளில் இந்தோனேசியா முக்கிய இடம் வகிக்கிறது, பாலி தீவு முழுவதும் நெல் வயல்கள் தான் இருக்கின்றன. பாலி மக்கள் விளைந்த நெல்லை முதலில் ஸ்ரீதேவி, பூதேவி ஆகிய தெய்வங்களுக்கு தான் படைக்கிறார்கள்.

அனைத்து வயல்களிலும் இந்த இரண்டு தெய்வங்களும் கோவில்கள் இருக்கும், விவசாயிகள் இந்த இரு தெய்வங்களை வணங்கிய பிறகு தான் விவசாய தொழிலுக்கு செல் வார்கள். பாலி இந்துக்கள் பூஜை செய்யும் பொழுது பிரிண்ட் செய்யப் பட்ட புத்தகங்களை வாசிப்பது இல்லை. இன்றும் கூட அவர்கள் கையால் எழுதப்பட்ட ஓலை சுவடியையே (Lontar) பயன்படுத்துகிறார்கள். இராமாணயம் அனைவருக்கும் தெரிந்து இருக்கும். இராமாணய ஓலைச் சுவடியை நல்ல நாட்களில் 'எடுத்து வரும் திருவிழா நடைபெறும்.

பாலினியர்கள் மொழி ஆஸ்திரேனேசியா மொழிக்குடும்பத்தின் மலாய்-பொலினேசியா கிளையை சேர்ந்த மொழி. இந்தோனேசியாவில் உள்ள பாலித்தீவில் இம்மொழியை பேசுவோர் அதிகம் வசிக்கிறார்கள். ஏறத்தாழ 35 இலட்சம் மக்கள் இம்மொழியை பேசுகிறார்கள்.

2011 ஆம் ஆண்டில், பாலி கலாசார நிறுவனம் பாலிதீவில் தங்கள் அன்றாட வாழ்வில் பாலினியர் மொழி யைப் பயன்படுத்துபவர்களின் எண் ணிக்கை ஒரு மில்லியனைத் தாண் டாது என்று மதிப்பிட்டது.

நகர்ப்புறங்களில் அவர்களின் பெற்றோர் இந்தோனேசிய மொழி அல்லது ஆங்கிலத்தை மட்டுமே பயன்படுத்துகின்றனர். நிறுவனங்கள் மற்றும் வெகுஜன ஊடகங்களில் தினசரி உரையாடல்கள் இம் மொழியில் இல்லை. பாலினியர் மொழியின் எழுதப்பட்ட வடிவம் பெருகிய முறையில் அறிமுகமில்லாதது போய்விட்டதோடு பெரும் பாலான பாலி மக்கள் வாய்மொழி தொடர்புக்கான வழி முறையாக மட்டுமே பாலினியர் மொழியைப் பயன்படுத்துகின்றனர்.

அத்துடன் அடிக்கடி இந்தோனேசிய மொழியில் தங்கள் தினசரி பேச்சில் கலக்கிறார்கள். ஆனால் பாலி தீவுக்கு வெளியே உள்ள சில பகுதிகளில், பாலினியர் மொழி பரவலாக பயன்படுத்தப்படுகிறது. இப் பயன்பாடு மொழியின் உயிர்வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கிறது என்று நம்பப்படுகிறது.

**பாலினியர்கள் எண் முறைமை** (Balinese numerals)

இது இந்து-அரபு எண் முறையைப் போன்றது. இந்து-அரபு எண்களைப் போலவே பாலினியர் எண்களும் எழுதப்படுகின்றன. உதாரணமாக, 25 என்பது பாலினியர் எண்கள் 2 மற்றும் 5 உடன் எழுதப் பட்டுள்ளது. எண்களை உரு 33 இல் பார்க்கவும்.

**ஜாவானியர்கள் (Javanese)**

ஜாவானியர்கள் (ஜாவானீஸ்) மக்கள் இந்தோனேசிய தீவான ஜாவாவைச் சேர்ந்த ஒரு இனக்குழு.

**பாலினியர்கள் எண்முறைமை**
**உரு33 (Balinese numerals)**




ஏறத்தாழ 100 மில்லியன் மக்கள், இந்தோனேசியாவில் மிகப்பெரிய இனக்குழுவை உருவாக்குகின்றனர். அவர்கள் முக்கியமாக தீவின் மத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் வாழ்கின்றனர்.

இந்தோனேசியா விட மலேசியா, சிங்கப்பூர், சுரினாம், எகிப்து, சவுதி அரேபியா, யமன் மற்றும் நெதர்லாந்து ஆகிய பெரும்பாலான நாடுகளில் கணிசமான எண்ணிக்கையிலான ஜாவானிய வம்சாவளியினர் உள்ளனர். ஜாவானியர்களும் ஆஸ்ட்ரோனேசிய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள், அவர்களின் மூதாதையர்கள் தாய்வானில் தோன்றியதாகக் கருதப்படுகிறது.

மேலும் பிலிப்பைன்ஸ் வழியாக கி.மு. 1500- கி.மு. 1,000 இற்கு இடையில் ஜாவாக்கு குடிபெயர்ந்தனர். இருப்பினும், சமீபத்திய மரபணு ஆய்வின்படி இது சிறிது மாறுபட்டு காணப்படுகிறது. பெரும்பான்மையான ஜாவானிய மக்கள் தங்களை சுன்னி முஸ்லிம்களாக அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள், சிறுபான்மையினர் கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்களாக அடையாளம் காட்டுகின்றனர். ஜாவானிய நாகரிகம் பூர்வீக ஆன்மிகமான கெஜாவென் ஆனது இந்திய இந்து பௌத்த கலாசாரம் ஆகியவற்றுக்கு இடையேயான ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கும் மேலான தொடர்புகளால் பாதிக்கப்பட்டுள்ளது, மேலும் இந்தச் செல்வாக்கு ஜாவானிய வரலாறு, கலாசாரம், மரபுகள் மற்றும் கலை வடிவங்களில் இன்னும் காணப் படுகிறது. ஜாவானிய பாரம்பரியம் பிரம்பனன் மற்றும் போரோபுதூர் போன்ற உலகின் மிகப்பெரிய கோவில்களை உருவாக்கியுள்ளது. கணிசமான உலகளாவிய மக்கள் தொகையுடன், ஜாவான்கள் அரேபியர்கள், வங்காளிகள் மற்றும் பஞ்சாபிகளுக்குப் பிறகு உலகின் நான்காவது பெரிய இனக்குழுவாகும்.

**ஜாவானிய மொழி**

ஜாவானீஸ் மொழி ஆஸ்ட்ரோனேசிய மொழிகளின் குடும்பத்தைச் சேர்ந்தது. இந்தோனேசியாவின் மற்ற மொழிகளுடன் நெருங்கிய தொடர்புடையது, ஆனால் வேறுபட்டது. இம்மொழியில் சமஸ்கிருதம் கலந்துள்ளது. குறிப்பாக இலக்கிய ஜாவான்களில் காணப்படுகிறது. இது ஜாவாவில் இந்து மற்றும் பௌத்த செல்வாக்கின் நீண்ட வரலாறு காரணமாகும். இந்தோனேஷியாவில் உள்ள பல ஜாவானியர்கள் இருமொழி பேசக் கூடியவர்கள், இந்தோனேசியன் (மலாய் மொழியின் தரப்படுத்தப்பட்ட மாறுபாடு) மற்றும் ஜாவானீஸ் ஆகியவற்றில் சரளமாக பேசக்கூடியவர்கள், சுமார் 12% ஜாவானியர்கள் இந்தோனேசிய மொழியையும் சுமார் 18% ஜாவானீஸ் மற்றும் இந்தோனேசிய மொழிகளையும் பயன்படுத்துகின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 பேர்...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,752 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## காஸ் அடுப்பு...

வெடித்ததாக பூவரசன்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, 4ஆம் கட்டைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சமைத்துக் கொண்டிருந்தபோது திடீரென காஸ் அடுப்பு வெடித்துள்ளது.

இதனையடுத்து வீட்டார் காஸ் சிலிண்டரைப் பாதுகாப்பாக அகற்றியமையால் மேலதிக அனர்த்தம் ஏற்படுவதைத் தடுத்துள்ளனர்.

அத்துடன் குறித்த சம்பவம் தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (ஞா-250)

## கிணற்றில் தவறி...

நாச்சிமார் கோவிலடி, திக்கம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நியாந்தன் தித்திஸ்குமார் (வயது-8) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

வீட்டுக்கு பின்புறமாக உள்ள தோட்டத்தில் சிறுவன் பட்டம் ஏற்றி கட்டிவிட்டு தோட்டக் கிணற்றில் தூண்டில் போட்டு மீன் பிடித்து விளையாடியுள்ளான். அச்சமயம் சிறுவன் கிணற்றில் விழுந்ததாக கூறப்படுகிறது.

இதனை அடுத்து அச்சிறுவனுடன் கூட இருந்த சிறுமி ஒருவர் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து உறவினர்கள் சிறுவனை மீட்டு ஊரணி வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் சிறுவன் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மரண விசாரணையை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா மேற்கொண்டார். (ஞா-18,33,60,104)

## கிளிநொச்சியில்...

டன் தேடிவந்த நிலையில், வீட்டுக் கிணற்றினை நீர் பம்பியின் மூலம் இறைத்துள்ளனர்.

இதன்போது குறித்த சிறுமி கிணற்றிலிருந்து சடலமாக அடையாளம் காணப்பட்டு, பின்னர் மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமியின் உடல் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

டசிந்தன் சன்சிகா என்ற 4 வயதுடைய சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஞா-100,316)

## உண்ணிக் காய்ச்...

யின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் கடந்த 16ஆம் திகதி காலை உடல் நலக்குறைவு காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இவரது உயிரிழப்புக்குக் காரணம் உண்ணிக் காய்ச்சல் என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மரணம் தொடர்பான விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ஞா-33)

## அத்வைத...

இருபத்து இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்து இருபத்து மூன்றாவது அகவையில் காலெடுத்து வைக்கும் வலம்புரி நாளிதழை இந்நாளில் வாழ்த்துவதில் அகமகிழ்வடைகிறேன்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுள் வலம்புரியின் செல்நெறியே அதன் வெற்றிப் பயணத்துக்குக் காரணமாகும். குறித்துச் சொல்லப்போனால் கந்தபுராணக் கலாசாரத்தில் திளைத்த யாழ்ப்பாண மக்கள் நன்நெறி நின்று ஆத்மீகத்தின் வழிநடப்பதற்கு வலம்புரி அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

ஒரு நாளிதழ் என்பதற்கப் பால், மார்க்கங்கள் பலவாகினும் அனைத்தும் ஒன்றே என்று உப நிடதங்கள், பிரம்மசூத்திரம் மற்றும் பகவத்கீதை ஆகிய வேதாந்த சாத்திரங்களை மையப்படுத்தி ஆதிசங்கரரால் நிறுவப்பட்ட அத்வைத தத்துவத்துக்கமைய மக்களை வழிநடத்தும் அரும் பணியை வலம்புரி ஆற்றி வருகிறது.

தனக்கெனத் தனித்துவமான சில விடயங்களைத் தன்னிடத்தே கொண்டமைந்த வலம்புரியின் இதழியல் மரபு போற்றுதற்குரியது.

அதனால்தான் மக்கள் வலம்புரியை விரும்பி வாசிக்கிறார்கள். வயதில் முதிர்ந்த பலர் வலம்புரியை விரும்புவதற்குப் பிரதான சிறப்பியல்புகளில் ஒன்று, அதன் வடிவமைப்பு: [illegible] கூடிய – தெளிவா[illegible]

வலம்புரியின் வார வெளியீடான "சங்குநாதம்" மற்றொரு சிறப்பம்சம். வலம்புரிச் சங்கில் இருந்து எழுகின்ற நாதமாகப் பல சுவையான - சுவாரஸ்யமான, ஜனரஞ்சக விடயங்களைத் தாங்கி வெளிவரும் சங்குநாதம் வாசகர்களின் நெஞ்சை விட்டகலாதது.

எல்லாவற்றையும்விட நெருக்கடியான காலங்களில் குடாநாட்டின் அத்தனை பகுதிகளுக்கும் வலம்புரி தன் விநியோக வலையமைப்பை விஸ்தரித்தமை அதனைச் சமூகத்தில் ஆழமாகக் காலூன்ற வழி செய்தது. அதனால்தான் யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெங்கும் வலம்புரி தவிர்க்க முடியாததொன்றாக நிலைத்திருக்கிறது.

நாம் ஒவ்வொருவரும் காலையில் நம் கைகளில் தவழும் பத்திரிகையைத் தான் வாசிக்கிறோம். ஆனால் அதன் உருவாக்கத்தின் பின்னால் இருக்கின்ற அயராத முயற்சியையும் அர்ப்பணிப்பையும் காணத் தவறுகிறோம்.

ஒரு பத்திரிகையின் உருவாக்கத்தில் அதன் நிருவாகி, பிரதம ஆசிரியர், ஆசிரிய பீடத்தினர் மற்றும் ஏனைய பணியாளர்களின் அயராத உழைப்பு இன்றியமையாதது.

அந்தவகையில் நாளும், பொழுதும் வலம்புரியின் வளர்ச்சியில் கண்ணும், கருத்துமாக இருந்து, பங்கெடுக்கின்ற அத்தனை பேரையும் இந்நேரத்தில் வாழ்த்தி, வலம்புரி மேலும் மேலும் வளர எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் நல்லாசிகள் கிட்ட வேண்டுமென இறையருள் இறைஞ்சி நிற்கிறேன் என்றுள்ளது. (ஞா)

## மாகாண சபைத்...

கெலிஓயா பகுதியிலுள்ள விகாரை ஒன்றில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## 55...

யில் ஈடுபட்டிருந்த 55 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பகுதிகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் தமிழகம் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 55 மீனவர்களைக் கைது செய்ததுடன் குறித்த மீன்பிடி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட 8 படகுகளையும் பறிமுதல் செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களிடம் கொரோனாப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு இவ்விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் இடைத்தங்கல் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட மீனவர்கள் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி 55 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதனையடுத்து இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஞா-18,33,60,104,285)

## தமிழ் மக்களு...

டத்தினை முன்னெடுத்துள்ள தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர்கள், "கடந்த 74 வருடங்களாக ஒற்றையாட்சி அரசில், தமிழர்கள் பல உரிமைகளை இழந்தனர் மற்றும் ஒரு அரசியல் ஆதாயம் பெறவில்லை. ஆக்கிரமிப்பு மற்றும் ஒடுக்குமுறையுடன் யுத்தம் மற்றும் இனப்படுகொலையின் தொடர்ச்சியின் பின்னர், தமிழர்கள் வடக்கு, கிழக்கில் ஒரு தமிழ் இனமாக வாழ்வதற்கு மூன்று அடிப்படை கட்டமைப்புகள் தேவை என்றனர். (ஞா)
























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9095)

**076 825 7716 (ஆகாஸ்)**

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். (9148)

தொடர்பு: ராஜ் - 077 679 6623

## பணிப்பெண் தேவை

இணுவிலில் வீட்டில் தங்கி நின்று பணியாற்ற பணிப்பெண் தேவை. (9149)

**077 401 6412**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கனக்கர் வளவு 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

14 அடிப் பாதையுடன்

சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்

**பார்வையிடும் நேரம்**

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9151)

தொடர்புகளுக்கு

**077 814 7389, 070 705 1655**

## உடனடி வேலை வாய்ப்பு

உரும்பிராயில் அமைந்துள்ள Super Market ஒன்றிற்கு கீழுள்ள வேலைக்கு ஆட்கள் தேவை.

- Stock data entry போடுதல் (பெண்கள்) - Computer knowledge அவசியம் (வயதெல்லை : 18 - 26)
- Cleaning (பெண்கள்) - கடை கூட்ட, துடைக்க மற்றும் Track துடைக்க (தகைமை : O/L) (C-3308)

**077 780 8030 (உரும்பிராய்)**

## விரைவு பொதிகள் சேவை

## V2 TRAVELS

## UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-3215)

**0768226240** DHL

Inner Circle



## வேலை வாய்ப்பு

**★Telecallers management trinees★Supervisor**

புதிதாக திறக்கப்படவுள்ள எமது கிளைகளுக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான வேலை வாய்ப்பு.

கிளைகள்:- Jaffna, Vavuniya, Mannar, Kilinochchi

✧ 18 – 30 வயதுக்கு இடைப்பட்ட O/L அல்லது A/L தகைமையுடைய அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

- அடிப்படை சம்பளத்துடன்கூடிய நிரந்தர தொழில்(EPF/ETF)
- பயிற்சி இலவசமாக வழங்கப்படும். ○ பயிற்சியின் போதே கொடுப்பனவுகள் (18,500/= - 40,000/=) வழங்கப்படும். (9144)

தொடர்புகளுக்கு : 076 770 7759  076 756 5659

✆/Whatsapp/SMS மூலம் உங்கள் Name, Address, NIC Number, CV என்பவற்றை அனுப்பி வைக்கவும்.

இல. 100/3, முட்டாசுகடைச் சந்தி, யாழ்ப்பாணம்.

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021 222 3536



**அருள்**

| | | |
|---|---|---|
| இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை. | இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. |

தொ.பே:- 076 443 1576 (C-3784)

## IELTS

DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

- #Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
- # Unique Test Tips
- # 40 hrs with free 4 mock exam
- # Latest course Material (Book 16)

Academic or General

**IELTS Life Skills - A1**

திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

**DIPLOMA IN ENGLISH**

**SPOKEN ENGLISH** நேரடி வகுப்புக்களாக

புதிய பிரிவு ஆரம்பம் 22/12/2021 Wed 9:30 am

**German** - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch

**French - France** நாட்டுக்கு செல்வோருக்கு (C-3306)

**DMI COMPUTER EDUCATION**

யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்...

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

## நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

**அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் சுகாதார வழி முறைகளுக்கு அமைவாகவும் இந்தியன் செலக்ஷனின் நத்தார் மற்றும் புதுவருட மலிவு விற்பனை நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியோடு வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.**

பட்டுச் சாறிகள், கொட்டுன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள், சிறுவர், சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள் மற்றும் ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைத் தெரிவுகள். (C-3285)



**16.12 2021 முதல்**

விசேட விலைக் கழிவுகள்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.

**இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்**

**காலம் : 16.12.2021 - 31.12.2021 வரை**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண மாவட்டத்தில் தவில் இசைக் கலைக்கு புகழளிக்கும் வண்ணம் பணியாற்றிவரும் கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்த

**திருவாளர் சண்முகம் ஆழ்வாப்பிள்ளை**

( தவில் வித்துவான் )

அவர்கள் நேற்று (2021.12.19) நடைபெற்ற மாவட்ட கலை கலாசார பண்பாட்டுப் பெருவிழாவில் **யாழ் முத்து** எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர் மென்மேலும் விருதுகளை பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துகின்றோம். (C-3309)

வாழ்த்துவோர் :

**ஆ.ஜெயானந்தம்** ( மகன் – நாதஸ்வரக் கலைஞர், வவுனியா )

**மனைவி, பிள்ளைகள்**

**வே.கிரிதரன்** ( மருமகன் )

**காவியா, இலக்கியா**

( பேரப்பிள்ளைகள் )


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org